ஸ்ரீ குமரகுருபரர்

வைகாசி 1 (15—5—83)

தொகுதி 5 பகுதி 8

உ

சிவ சிவ

'ஸ்ரீ குமரகுருபரர்'

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய — இலக்கியத் திங்கள் இதழ்.

சிறப்பாசிரியர்.

பேராசிரியர்

திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-

திரு மு. அருணசலம், M. A., திருச்சிற்றம்பலம்

திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை

மகாவித்துவான்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலைநகர்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T., காஞ்சிபுரம்

புலவர் திரு. கீரன், லால்குடி

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D., மதுரை

திரு கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்

திரு. பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்

அட்டையில்:

ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் திருவுருவம்

ஸ்ரீ குமரகுருபரர்

தொகுதி 5 வைகாசி பகுதி 8

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாடுதுறை ஆதீனத்தின் இருபத்து மூன்ருவது மகாசன்னிதானமாக 7-4-83அன்று பீடமேற்றருளியுள்ளவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் அவர்கள் ஆவார். 33 வயதே நிரம்பிய இளமை தலைமை ஏற்றிருக்கும் இனிமையைச் சைவர் உலகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது என்பதில் ஐயமில்லை. செயல்வேகமும் சைவத்தையும், தமிழையும் தழைக்கச் செய்வதில் தனி ஆர்வமும் மிக்க திருவாடுதுறை ஆதீன இருபத்து மூன்ருவது மகாசன்னிதானம் அவர்களின் அருளாட்சியை உலகம் புகழவேண்டும்; பயன்பெற வேண்டும்!

7.4.83 அன்று இருபத்திரண்டாவது மகாசன்னிதான மாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசர்ர்ய சுவாமிகள் அவர்கள் பரிபூரணம் எய்தினர்கள். அவர்களின் அருளாட்சிக்காலத்தில் சைவத்தை மக்களின் மனத்தில் பதிக்கப் பல புதிய உத்திகளைக் கையாண்டார்கள். சமய மாநாடுகள், பதிப்புக்கள் ஆகியவை அவர்களின் சிறப்புப் பணிகளாக அமைந்தன. சூருவளிகளையும் தென்றலாக்கி விடும் அதியற்புத நிர்வாகத் திறமை கொண்டவர்களாக அவர்கள் விளங்கியருளினர்கள்.

வாழ்க துறைசை ஆதீனம்!

வளர்க நம் சைவம்!

உ

சொக்கலிங்கம் துணை

திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பிகள் நினைவு திருமுறைத் திருவிழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் கயிலைமாமுனிவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது.

ருதிரோத்காரி ஆண்டு வைகாசித் திங்கள் 30-ஆம் நாள் 13—6—83 திங்கட்கிழமை இரவு 8 மணிக்குத் தொடங்கும்.

திருமுறைவாணர்கள் :-

தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்

திரு. T. M. விசுவலிங்கம், சபாபதி சகோதரர்கள்
திருவாவடுதுறை.

தேவார இசைமணி

திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.

திரு. சு. சம்பந்தன், திருவிடைமருதூர்.

திரு. C. S. குமாரசாமி தேசிகர்
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருநாரையூர்.

திரு. S. A. கோபாலன், வேய்ங்குழல், சிதம்பரம்.

திரு. கோ. வெங்கட்ராமன்-மிருதங்கம், திருப்பனந்தாள்.

Sri Kasi Mutt
Religious Charities
Tirupanandal

உத்தரவுப்படி,
R. V. SUBRAMANIAM,
Manager.

குறிப்பு: திருநாரையூரில் ஒரு ஓதுவார் நியமிக்கப்பெற்று நாடோறும் திருமுறைப் பாராயணம் நடைபெற்று வருகிறது. 17-5-83 சேக்கிழார் சுவாமிகள் நினைவு நாளில் குன்றத்தூரிலும் தஞ்சை மாவட்டம் திருநாகேஸ்வரத்திலும் நண்பகலில் அன்னம் பாலிப்பு நடைபெற்றது.

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

அருள் பழுத்த கனிச்சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
'கயிலைமாமுனிவர்'
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள்

உலகத்தில் பல்வேறு சமயங்கள் உள்ளன. ஆனால் பரம்பொருள் ஒன்றே. சமயங்கள்பல வானமைக்குப் பல காரணங்கள். மையக் காரணம், ருசி பேதமே என்றால் பிழையில்லை.

எல்லாச் சமயத்தவரும் அன்பை ஒத்துக்கொள்ளுகிறார்கள். நற்பண்புகளை ஒத்துக்கொள்கிறார்கள். உயிரின் சுகவிடுதலையை வரவேற்கிறார்கள். அப்படியும் சமயங்கள் வேறுபடுகின்றன.

உலகச் சமயங்கள் எல்லாவற்றையும் இரண்டு பெரும் பிரிவுக்குள் சுருக்கலாம். ஒன்று வேதத்தை உடன்படும் சமயங்கள். மற்றது வேதத்தை மறுக்கும் சமயங்கள். இஸ்

லாம், கிறிஸ்தவம் ஆகிய உலகப்பெரும் சமயங்களும் வேத உடன்பாட்டுச் சமயங்களே ஆகும்.

கடைத்தேற்றம் என்பதே ஜீவனின் நோக்கம் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. லோகாயுதர்கூட இதில் முக்கால்பங்கு உடன் படுகின்றனர்.

உயிர், உலகு, இறை என்ற மூன்று செய்திகளைப் பற்றிய முடிவுகளில் அணு அணுவாகச் சமயங்கள் வேறு படுகின்றன. அவற்றை வேறுபாடுகள் என்றே கூறவேண்டும் அவை மாறுபாடுகளாக வருணிப்பது சாமன்ய மனித சுபாவம். அதைவிட ஒரு கொடுமை உண்டு. சமயிகளுக்குள் ஏற்படும் விரோதங்கள், சமய விரோதமாக எழுவது. சமய விரோதம் என்பது நமக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல,நேற்று இன்று என்றுமே சரி, சமயிகளின் விரோதமே சமயக்கலவரம். நிச்சயமாகச் சமயங்களுக்குள் வேறுபாடு உண்டு; மாறுபாடு இல்லை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்குச் 'சமய விரோதம்' பிடிக்காத விஷயம்.அவர் இந்து முஸ்லீம் இணைப்பு ஒற்றுமைக்கே முதல்வரும் முன்னவரும் ஆவார். அவர் அறிவிக்கிறார், 'என்குருநாதர் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்களும் சமய விரோதப் பிணக்கறுத்தவர்' என்று.

பின்னம்-சிறுவேறுபாடு.சிறுவேறுபாடுகளைப்படைப்பது சமயப் பிணக்கு.சமயப் பிணக்கறுத்து அதற்கு அடையாளம் படைத்தவர் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்.

பின்னம் படைத்த சமய விரோதப்
பிணக்கறுத்து ஓர்
சின்னம் படைத்த முனிமாசிலாமணி

ஸ்ரீ மாசிலாமணி சின்னமாகப் படைத்தது எது என்பது சிந்தனைக்குரியது. சமய விரோதம் இனி எப்போதும் இருக்க

லாகாது எனக்கூறி ஸ்தாபித்துச் சொன்ன உறுதிச் சொற்களையே ஸ்ரீ சுவாமிகள் 'சின்னம்' எனக் குறிக்கிறார்.

"அத்தகைய பெரியவரின் அடியவராகிய யாம் 'சித்தர்' என்ற நிலைபெற்றோம். இன்னமும் என்னைப் படைத்த பிரமன் இனியும் படைக்கக் காரணம் பெறமாட்டான். ஏனென்றால் பாவ புண்ணிய காரணங்கள் இருந்தாலொழியப் பிரமன் மீண்டும் படைக்க முடியாது" என்கிறார்.

அன்னம் படைத்தவர்
இன்னம் படைத்தவர்; ஏது பெறார்"

எனக்கூட்டி இப்பொருள் கொள்ள வேண்டும். ஏது - காரணம். இங்குப் படைத்தலுக்குரிய புண்ணிய பாபங்களைக் குறிக்கும்.

'ஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடம் சமய விரோதப் பிணக்கற்ற நிலையைக் உபதேசத்தால் பெற்ற இந்தப் பிறப்பே எமக்கு அமுதம் போன்றது. எல்லா உலகங்களையும் பெற்ற மகிழ்ச்சி இதனால் எமக்கு ஏற்படுகிறது. எந்த நாளிலும் இந்த மகிழ்ச்சியைப் பிரமனும் அடைந்திருக்க முடியாது' என்றும் இப்பாடலின் இறுதி அடிகளில் ஸ்ரீ சுவாமிகள் அறிவிக்கிறார்.

........அமுது இங்கு எமக்கு. என்று
அன்னம் படைத்தவர் பெற்றார் புவனம் அடங்கலுமே?

என்பது அப்பகுதி.

இன்னம் படைத்தவர் ஏது
பெறார்அமுது இங்கு எமக்கு என்று
அன்னம் படைத்தவர் பெற்றார்
புவனம் அடங்கலுமே

என்னும் இப்பின்னிரண்டு அடிகளுக்கு வேறொரு உரை கூறுவதும் உண்டு.

"சித்தர்களுக்கு உணவு தேவையில்லை. உறக்கமும் தேவையில்லை. அடியவர்கள் தங்கள் புண்ணியங்களுக்காக

இத்தகு சித்தர்களுக்கு அன்னம் படைப்பார்கள். யாங்களும் சித்தர்களே. எமக்கு ஒருமுறை "அன்னத்தை அமுதம் என்று படைத்தவர்கள் உலகம் முழுவதையும் இப் புண்ணிய வசத்தினல் பெறுவார்கள். மீண்டும் மீண்டும் படைத்தவர்கள் வேறு எதைப் பெறமாட்டார்கள்? எது நினைக்கினும் பெறுவார்கள்'' என்பது அவ்வுரை.

பண்டார மும்மணிக்கோவை 25 - ஆம் பாடலின் முழுவடிவையும் பார்ப்போம்:-

பின்னம் படைத்த சமய விரோதப்
பிணக்குஅறுத்து ஓர்
சின்னம் படைத்த முனிமாசி லாமணிச் சித்தர்யாம்
இன்னம் படைத்தவர் ஏதுபெருர்
அமுதுஇங்கு எமக்கு என்று
அன்னம் படைத்தவர் பெற்ருர் புவனம் அடங்கலுமே.

—சிவ சிவ

Phone No: 222 Tel. Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

நடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்
சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்,
உரிமையாளர்கள்:
நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.
தென்னர்க்காடு மாவட்டம் — 608 001

உ

சிவமயம்

தருமையாதீனத்தில் சமயப் பயிற்சி வகுப்பு

தருமையாதீனம் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குரு பூஜைப் பெருவிழா 23-5-83 முதல் 2-6-83 வரை தருமையாதீன படாலயத்தில் சிறப்பாக நடைபெற இருக்கிறது. இவ்விழாவை முன்னிட்டு திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும் நிகழவுள்ளன.

சமயப்பயிற்சி வகுப்பு ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில் 23-5-83 அன்று தொடங்கி நடைபெறவுள்ளது. இவ் வகுப்பில், 35 வயதுக்குட்பட்ட, பட்டப்படிப்பிற்குக் குறையாத கல்வியுடையவர்களும், சமயத்துறையில் மிக்க ஆர்வமும் பள்ளி யிறுதி வகுப்புவரை படித்த ஆண், பெண் இருபாலாரும் பயிற்சியாள ராகச் சேர்த்துக் கொள்ளப்பெறுவர். இதில் ஆசிரியர்களுக்கு முதலிடம் தரப்பெறும். சமய நூல்களில் ஆழ்ந்த புலமையும் அனுபவமும் உடைய அறிஞர் பெருமக்களால் வகுப்புக்கள் முறை யாக நிகழ்த்தப்பெறும். சைவசித்தாந்த சாத்திரம், திருமுறைகள், வேதாகம புராண இதிகாசக் கருத்துக்கள், உபநிடதம், சமய விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் முதலியன பற்றிய தத்துவ உண்மைகள் போதிக்கப்பெறும். சமயச் சொற்பொழிவு, ஆலய வழிபாடு, தியானப் பயிற்சி, யோகாசனப் பயிற்சி முதலியனவும் இடம் பெறும். உணவும் உறையுளும் இலவசம்.

கலந்துகொள்ள விரும்புவோர் தனித்தாளில் தங்கள் பெயர், வயது, கல்வித்தகுதி, சமயம், ஆற்றிவரும் பணி, இதற்கு முன் சமயப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்ட விவரம் முதலிய வற்றைத் தெளிவாக எழுதி ''மேலாளர், தரும்புர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை- 609 001'' என்ற முகவரிக்கு ரூ 10/ பொறுப்புக் கட்டணம் செலுத்தி அஞ்சலக இரசீதை இணைத்து 15-5-83க்குள் அனுப்பி வைக்க வேணும்.

அனுமதிக் கடிதம் பெற்றவர்கள் தங்கள் சொந்தச் செலவில், தருமைக்கு வந்து சமயப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயண டைவதுடன் சான்றிதழும் பெறலாம்.

நூல் நிறை

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நீதிக்கதைகள

[வெளியீடும் கிடைக்குமிடமும்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் மயிலாப்பூர், சென்னை 600 004; பக்கங்கள் 48; விலை ரூ. 4]

இது இரண்டாம் பதிப்பு. ஸ்ரீ இராமகிருஷ்ணர் சிறுவர்களுக்காக அருளிய 12 நீதிக் கதைகள் இந்நூலில் உள்ளன. நீதிகள் பெரியவர் களுக்கும் தான்.

1. எவ்வுயிர்க்கும் துன்பம் தரக்கூடாது.
2. பிறர் சிந்தனைகளையும் மதிக்க வேண்டும்.
3. தூய இதயம் வேண்டும்.
4. எல்லாம் கடவுள் செயல் என்று இருக்க வேண்டும்.
5. வேறுபாடுகள் பொருள்களின் புறத் தோற்றத்தில்தான் என்று உணர வேண்டும்.
6. எந்தக் கடினமான சூழலிலும் கடவுள் திருநாமத்தைச் சிந்தனை ஒன்றி உச்சரிக்க வேண்டும்.
7. பக்தியையும் ஞானத்தையும் நாம் கடவுளிடம் வேண்ட வேண்டும்.
8. ஆணவக் காரனின் கல்வியைக் கல்வியாக மதிக்க முடியாது.
9. கருமமே கண்ணுயினர், மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்.
10. நாம் ஒவ்வொருவரும் தெய்வக்கனலின் சிறுபொறி.
11. கடவுளைப் பற்றிய செய்திகளில் வாதம் கலப்பது அறிவீனம்.
12. ஞானம் வரும் காலத்தில் வேஷமும் உண்மையாகும்.

இந்த நீதிகள், நீதிகள் மட்டுமல்ல. அறங்களும் சத்தியங்களும் ஆகும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளைச் சினிமாவுக்கு அழைத்துச் செல்வதை நிறுத்தி, இத்தகைய நூல்களை வாங்கித்தந்து படிக்கச் செய்து தாமும் கேட்க வேண்டும்.

17 எழுத்து, ஒற்றுப்பிழைகள். சிறுவர் நூல். அடுத்த பதிப்பில் தவிர்க்கப்படும். பக்கம் 13இல் இராமகிருஷ்ணரின் வரலாறும் இணைவதால் நூலின் தலைப்பைப் பாதிக்கிறதோ? ஒரு முன்னுரை எழுதியிருக்கலாம்.

பல மொழிகளிலும் இந்நூல் வெளியிடப் பெற்றிருப்பது ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் உலகளாவிய பார்வையை மேலும் உறுதிப் படுத்துகிறது.

—தி. ஆ—ர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளின்

295- ஆம் ஆண்டு

மாகேஸ்வர பூஜைத் திருநாள்

ருதிரோத்காரி ஆண்டு வைகாசித் திங்கள் -15 ஆம்
நாள் (29-5-83) ஞாயிற்றுக்கிழமை

❋—❋

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீ வைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப்பெருமான் அருளால் ஐந்தாவது ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி அருள் பெற்றார். மதுரை மீனாட்சி அம்மைமீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப் பெற்றார். திருமலைநாயக்க மன்னன் விருப்பத்திற்கிணங்க 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை அருளினார். தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டு அவரை ஞான குருவாகக் கொண்டு 'பண்டார மும்மணிக்கோவை' பகர்ந்தார். ஆரூர், வேளூர், தில்லை தரிசித்துத் திருவாரூர் நான்மணிமாலை முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை முதலியன பாடினார்; காசி சென்று சகலகலாவல்லி மாலை 'காசிக்கலம்பகம்' முதலியன அருளினார். சிங்கத்தின் மீதேறிச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அம்மன்னன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத்துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்யா குருவாகத் திகழ்ந்தார். செயற்கரிய செயல்கள் பலபுரிந்த ஸ்ரீ குமரகுருபர முனிவர் பெருமானின் நினைவு உலகுக்குச் சிவநெறி காட்டி இன்பம் பயக்கும்.

உ

சிவ சிவ

திருப்பனந்தாளில் ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள்

295 - ஆம் ஆண்டு

மாகேசுவர பூஜைத் திருநாள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-வது அதிபர்

'கயிலை மாமுனிவர்'

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

திருவுளப்பாங்கின் வண்ணம் நடைபெறுவது.

ருதிரோத்காரி ஆண்டு வைகாசித் திங்கள் 15-ஆம் நாள் (29—5—83) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மாகேசுவர பூஜைத் திருநாள் நடைபெறும்.

இதனையொட்டி 27-5-83, 28-5-83 ஆகிய இரு நாட்களிலும் கும்பகோணம் ஸ்ரீ **ஆதிகும்பேஸ்வர சுவாமி திருக் கோயிலில்** ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நீதிநெறி விளக்கம் பற்றிய கருத்தரங்குகள் நிகழ்ச்சி நிரலில்காணும் வண்ணம் நடைபெறும்.

நண்பகலில் பூஜையும், மாகேசுவர பூஜையும் நடைபெறும்.

அன்பர்கள் வந்து திருவருள் பெறுவாராக.

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
1—5—83

ஆணைப்படி,
முத்து. மெய்கண்ட தேவன்,
மானேசர்.

ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமர குருபர சுவாமிகள் நினைவுக் கருத்தரங்கம்

முதல்நாள் நிகழ்ச்சி நிரல்

இடம் : கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் திருக்கோயில்

நாள் : 27-5-83 வெள்ளிக்கிழமை

நேரம் : மாலை 6-30 முதல்

பொதுப்பொருள் : 'நீதிநெறி விளக்கம்'.

தலைவர் : திரு மு. அருணாசலம் எம். ஏ., அவர்கள்.

சொற்பொழிவாளர்கள்	தனித்தலைப்புக்கள்
1. திரு. கம்பராமன் அவர்கள்	'கல்வி நீதிநெறி'
2. திரு. சொ. சொ. மீ. சுந்தரம் M. Com., அவர்கள்,	'இல்லற நீதிநெறி'
3. திரு. க. கு. கோதண்டராமன் அவர்கள்,	'அரசு நீதிநெறி'
4. வாகீசகலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கள்,	'சமூக நீதிநெறி'

★★★

இரண்டாம் நாள் நிகழ்ச்சி நிரல்

இடம்: கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் திருக்கோயில்

நாள்: 28-5-83 சனிக்கிழமை

நேரம்: மாலை 6-30 முதல்

பொதுப்பொருள்: 'நீதிநெறிவிளக்கம்'

தலைவர் : பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ, அவர்கள்,

சொற்பொழிவாளர்கள்	தனித்தலைப்புக்கள்
1. செஞ்சொற் கொண்டல், தமிழாகரர் டாக்டர் **சொ. சிங்காரவேலன்.** எம். ஏ. பி.. எச்டி அவர்கள்,	**மேலைநாட்டுச் சிந்தனைகளுப் நீதிநெறி விளக்கமும்**
2. **திரு. கா. ம. வேங்கடராமையா** எம். ஏ., அவர்கள்,	**திருக்குறளும் நீதிநெறி விளக்கமும்**
3. புலவர் **திரு. மு. கணபதி** அவர்கள்,	**சமய இலக்கியங்களும் நீதிநெறிவிளக்கமும்**
4. டாக்டர் டி. பி. சித்தலிங்கையா எம். ஏ., பி. எச்டி அவர்கள்	**தத்துவ நூல்களும் நீதிநெறி விளக்கமும்**

இரண்டு நாட் கருத்தரங்குகளும்
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
கயிலைமாமுனிவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
திருமுன்னிலையில் நடைபெறும்.

வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்.

1983ம் — வருடம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு.
கீழ்க்கண்ட இடங்களுக்குத் தொகை அனுப்பப்பட்டுள்ளது.

	ரூ.		ரூ.
வாரணாசி	500	உத்திரகோசமங்கை	140
ஷ்டி பண்டாரா	700	திருவாடானை	200
பிரயாகை	350	பழனி	285
ஹரித்துவார்	400	திருப்பெருந்துறை	140
ரிஷிகேசம்	400	ஆக்கூர்	145
திருக்கேதாரம்	400	மாயூரம்	285
இராமேஸ்வரம்	500	வைத்தீஸ்வரன்கோவில்	200
ஸ்ரீவைகுண்டம்	360	சீர்காழி	140
திருச்செந்தூர்	140	ஆச்சாள்புரம்	300
திருநெல்வேலி	140	திருப்பத்தூர்	200
பழைய பாபநாசம்	140	பேரூர்	220
திருக்குற்றாலம்	300	விராலிமலை	140
காஞ்சிபுரம்	200	திருவானைக்கா	200
திருக்கழுக்குன்றம்	200	அவிநாசி	250
திருக்கச்சூர்	175	திருப்பாண்டிக்கொடுமுடி	250
திருவொற்றியூர்	140	பவானி	300
திருத்தணி	200	திருவையாறு	250
காளஹஸ்தி	200	சுவாமிமலை	200
காவிரிப்பூம்பட்டினம்	140	கும்பகோணம்	350
திருவெண்காடு	225	திருவிசநல்லூர்	200
திருக்கடவூர்	200	கஞ்சனூர்	200
வேதாரண்யம்	140	திருவிடைமருதூர்	140
திருப்புகலூர்	400	திருவண்ணாமலை	500
திருவாரூர்	200	திருமாகறல்	250
நாகப்பட்டினம்	350	சென்னை	150
திருநள்ளாறு	140	வடதிருவாலங்காடு	140
காரைக்கால்	175	உத்திரசுவாமிமலை (டெல்லி)	140
திருவீழிமிழலை	150	திருப்பாதிரிப்புலியூர்	200
மதுரை	500	விருத்தாசலம்	300
திருப்பரங்குன்றம்	200	திருக்கோவலூர்	140
சிதம்பரம்	200	ஆஸ்ராமம்	200
ஷ்டி தில்லைவாழந்தணர்	450	ஈங்கோய்மலை	200
கன்னியாகுமரி	200	திருப்பனந்தாள்	10,000

30-5-83உ வாரணாசி ஸ்ரீ குமாரசுவாமிமடத்தில்சாதுக்கள் பண்டாரா

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருச்செந்தூரில்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 20-வது அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

11-ஆம் ஆண்டு நினைவுநாள்—மாகேசுவரபூஜை

ருதிரோத்காரி வருஷம் வைகாசித் திங்கள் 4-ம் நாள்

(புதன்கிழமை 18—5—1983)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம் நடைபெறுவது.

நிகழ்ச்சி விபரம்

காலை 9-00 மணி முதல்

1. திருச்செந்தூரில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாசேசுவர பூஜை — வழிபாடு.
2. திருமுறை ஓதல் - கந்தர்கலிவெண்பாப் பாராயணம்.
3. தீபாராதனை.
4. மாசேசுவர பூஜை.

இரவு7-00 மணி, சாயரட்சை தீபாராதனை.

இரவு8-00 மணி, திருமுறைவிழா.

திருமுறைவாணர்கள்:

1. திரு. ஆ. முருகையா பிள்ளை.
2. திரு. கணபதியா பிள்ளை.
3. திரு. சுப்பையா பிள்ளை.
4. குன்றக்குடி, திரு. ப. ஆவுடையப்ப தேசிகர்.
5. அம்பை, திரு. A. P. சங்கரன்—ஹார்மோனியம்.
6. சிங்கை, திரு. லெட்சுமண பிள்ளை—மிருதங்கம்.

திருமுறைவாணர்கள் திருமுறை ஓதிக்கொண்டு வீதிவலம் வருதல். நமரங்காள் வருக! வருக!

S. ஆறுமுகம்

செயலாளர், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்

ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ வைகுண்டம்

20—4—83

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

295-ஆம் ஆண்டு

மாகேசுவர பூஜைத் திருநாள்

ஸ்ரீவைகுண்டத்தில்

இன்னிசைத் திருமுறை விழா

29—5—83

ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்

ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களின் அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது.

ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் அவதரித்த ஸ்ரீ வைகுண்டத்தில் அன்னாரின் மாகேஸ்வர பூசைத் திருநாளாகிய 29—5—83 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்குத் தொடங்கி இரவு முழுவதும் திருவீதிவலம் வந்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருக்கோயிலில் நிறைவு செய்யப்பெறும்.

திருமுறைவாணர்கள்:

1. திரு. ஆ. முருகையா பிள்ளை.
2. திரு. S. ராமகிருஷ்ணன்.
3. திரு. ச. கணபதியா பிள்ளை.
4. திரு. சுப்பையா பிள்ளை.
5. திரு. S. ராஜன்—ஹார்மோனியம்.
6. திரு. S. ராமசுப்பு—மிருதங்கம்.

தமரங்காள் வருக!

ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீ வைகுண்டம்.

S, ஆறுமுகம்
செயலர்.

உ

சிவ சிவ

சுசீந்திரத்தில் ஸ்ரீ தாணுமாலயசுவாமி தேவஸ்தானத்தில்

சித்திரைத் திருவிழா

தேவார கோஷ்டி

கன்னியாகுமரி ஆச்சிராமம் திருப்பனந்தாள்
திருமுறை அன்னம்பாலிப்பு வகையரு நிதியின்படி
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
''கயிலைமாமுனிவர்''
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்களின்

அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது.

19—5—83 முதல் 21—5—83 முடிய

திருமுறைவாணர்கள்:—

அனைத்து இந்திய சங்கீதக் கலைஞர்கள் சங்கத் தலைவர்:

1. திரு. E. S. ராஜாமணி R. M. P. இருளப்பபுரம்
2. திரு. T. தம்பையா ஓதுவார்
   ஸ்ரீ காசிமடம் திருமுறைப்பணி ஆசிராமம்.
3. திரு. E. S. R. திருஞானசம்பந்தம் B Sc., இருளப்பபுரம்
4. திரு. S. A. அரிராம் பாகவதர் நாகர்கோயில்.
5. திரு. ராதாமணி அய்யர் பிடில், நாகர்கோயில்.
6. திரு. ஈஸ்வரன் புல்லாங்குழல், வெள்ளமடம்.
7. திரு. முத்தப்பா ஆசாரி, மிருதங்கம், நாகர்கோவில்.
8. திரு. நீலகண்டன், கெஞ்சிரா, நாகர்கோவில்.
9. திரு. சிதம்பரம் ஹார்மோனியம் நாகர்கோவில்.
10. திரு சிவ அருள் நெறித்திருக்கூட்ட மாணவ மாணவிகள்

உத்திரவுப்படி,
பா. கனகசபாபதி பிள்ளை,
ஏஜண்டு, ஸ்ரீ காசிமடம், ஆசிராமம்.

குறிப்பு:- மேற்படி ஓதுவார்கள் 22—5—83 கன்னியாகுமரி அருள் மிகு பகவதியம்மன் கோயிலில் திருமுறைப்பணி செய்வார்கள்.

சைவத் திருமுறைகளும் சமுதாய நெறிமுறைகளும்

18666

பேராசிரியர் : அ. ச. ஞானசம்பந்தன்.

அன்பின் பெருக்கத்திலே, இந்தச் சமுதாயத்தின் மேல் வைத்த எல்லையற்ற கருணையாலே நேரடியாக மக்கள் செய்த குற்றங்களை எடுத்துக் காட்டாமல், சமுதாயத்தை வாழ்விக்க நினைக்கின்ற காலத்திலே ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்று பாடுகிறார்கள் அப்படி வாழ்ந்தால் அடுத்த உலகம் போய்விடுமென்று சமுதாயம் எண்ணுகிற காலத்தில், 'எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை' என்று சொல்லுகிறார் அப்படி சொல்லிச் செல்லுகின்ற முறையிலே இந்தச் சொற்களைப் படிக்கும் மக்கள் அதிலே ஈடுபடுகிறார்கள்.

சாதாரண ஆங்கிலம் பேசுபவர் மகாத்மா. அற்புதமான ஆங்கிலம் பேசுபவர்கள் இருக்கிறார்கள். ரைட் ஆனரபிள் சாஸ்திரியார் ஒரு முறை பேசினார். ''காந்திஜி எனக்கு இரண்டு பக்கம் லெட்டர் எழுதி இருந்தார்; நான் சிவப்பு மை எடுத்து, அதை நொறுக்கி விட்டேன்; இவ்வளவு, தப்பு பண்ணியிருக்கிறீர்களென்று சொல்லி அதைத் திருப்பி அனுப்பி விட்டேன்; அவர் நன்றி பாராட்டி நான் கட்டுரை எழுதி ஆங்கிலத்தைக் கொலை பண்ணும்போது கொஞ்சம் திருத்தி அனுப்பினால் நல்லது என்று எழுதியதுடன் கொஞ்ச நாள் 'யங் இந்தியா'வுக்கு அவர் எழுதிய கட்டுரைகளை அனுப்பினார்; பிறகு நானும் வேறு வேலையாய்ப் போய் விட்டேன்; காந்திஜியும் அனுப்புவதை விட்டு விட்டார்'' என்று சொன்னார். ஆக மொத்தம் காந்திஜியின் ஆங்கிலம் பிரசித்தமானது அல்ல வாக்கியங்கள் குட்டி குட்டியாக இருக்கும். 4 வார்த்தைகள், 5 வார்த்தைகள்; அதற்கு மேலே இருக்காது. ஆனால் மிக அற்புதமாக ஆங்கிலம் பேசுகிறவர் ரைட் ஆனரபிள் சாஸ்திரி அவர்கள். ரைட் ஆனரபிள் சாஸ்திரியாரின் ஆங்கிலத்தை வியந்தார்கள். காந்திஜியின் 'எழுத்தை' வியந்தார்கள். இதை மறந்து விடக் கூடாது. ரைட் ஆனரபிள் சாஸ்திரி அவர்களின் ஆங்கிலத்தை வியந்து கைதட்டினார்கள்

ஆனால் காந்திஜியின் ஆங்கிலத்தை வியக்க ஒன்றுமில்லை. ஏனென்றால் அது மிகச் சாதாரணமான ஆங்கிலம். ஆனால் அது உள்ளே சென்று தைத்து என்னவோ பண்ணியது. அது நம்மையும் அறியாமல் வேலை செய்யும். ஆகையால் காந்திஜியின் எழுத்தைப் படிக்கிறவர்களுக்குச் சர்க்கரை கலந்த மாத்திரை உள்ளேபோய் வேலை செய்வதுபோன்று, உள்ளே அது வேலை செய்ய ஆரம்பிக்கும். காந்திஜியினுடைய எழுத்துக்கள் அனுபவத்திலே, சத்தியத்திலே தோய்ந்தவை. அந்த ஆங்கிலம் சரியோ, தவறோ, அது வேறு சமாச்சாரம்.

It penetrated in to your heart அதுபோல இந்த நாயன்மார்களுடைய தேவாரங்களும், ஆழ்வார்களுடைய பிரபந்தங்களும் penetrated into the heart of the society. இல்லாவிட்டால் establi shed ஆக உட்கார்ந்திருக்கிறார் economic supremacy-ல் கோவில் குருக்கள் அதை மறந்து விடக் கூடாது. நீங்கள் அதை அர்த்தம் பண்ணும் முறை வேறு. ஸ்ரீரங்கத்தில் இருக்கிற கோவில் குருக்கள் தன்னை உயர்ந்தவன் என்று நினைக்கிறான். டெக்னிகலாக பிராமணன் தன்னை உயர்ந்தவன் எனறு நினைப்பது ஒரு பகுதி. 90/ it is an economic affair. அவன் போய் ...தோளிலே வைத்துக்கொண்டு, தூக்கி வரும் படியாக ஆண்டவன் அவனுக்குச் சோதனை கொடுக்கிறான். உங்களையும், என்னையும் இல்லை. யார் தூக்கித் தோளிலே வைத்துக்கொண்டு வர வேண்டும் என்றானோ அவனைத் 'தூக்கிக் கொண்டு வாடா' என்கிறான்.

அடுத்து இன்னொருவரைப் பிள்ளையை வெட்டி, கறி சமைக்கச் சொல்கிறான். யாரை? ஞானசம்பந்தத்தையா? இல்லை. எலியைக்கூடக் கொன்றது கிடையாது ஞானசம்பந்தம். ஆனால் காஞ்சிபுரத்திலே புறப்பட்டு, கல்யாணி வரையிலே போய், சதக், சதக் என்று வெட்டுகிறான். என்னடா பரஞ்சோதி, வெட்டுகிறாய் என்றால், I am discharging my duty to the country என்றான். அவனுக்குச் சோதனை; அது சரி. கடமைதானே, வெட்டினாய் அல்லவா. இப்போது இது கடமை. Will you do it?.

ஆகமொத்தம் சோதனை எப்படி வருமென்றால் அவனவனுடைய தகுதிக்குத் தகுந்த மாதிரி வரும்.

தூக்கினவன் யார்? கோவில் குருக்கள். அவன் என்ன நினைக்கிறான்? ஆண்டவன் பக்கத்தில் இருப்பதால் உயர்ந்தவன் என்று நினைக்கிறான். சரி. டைனமோ பக்கத்தில் காப்பர் ஒயர் இருந்தால், it will gain current. மரக்கட்டை கிடந்தால் ... இறை

உரிய இயல்புகள் இருந்தால் அவன் மேலே போவான். அதை மறுக்க முடியாது. அதனால்தான் எங்கள் பெருமான் பாடுவார், 'முப்போதும் திருமேனி தீண்டு வார்க்கு அடியேன்' என்று; தீண்டுகிறவனுக்கெல்லாம் அல்ல. தீண்டினதாலே தகுதிமேம்பாடு ஏற்பட்டவனுக்கு அடிமை. சார்ஜ் ஆகாமல் டிஸ்சார்ஜ்ஜி லேயே இருக்கிறவனை யாரும் ஒன்றும் பண்ண முடியாது; அவன் வரலாம். அது வேறு. அது தான் சமூக வாழ்வு. ஆகச் சமுதாயம் இவர்களுடைய 'அற்புதங்கள்' காரணமாக இவர்கள் பின்னால் சென்ற தென்று யாரும் தயவு செய்து நினைக்காதீர்கள். தமிழர்கள் அற்புதங்களைக் கண்டு ஏமாந்த தில்லை. இன்றைக்குத்தான் அப்படி ஏற்பட்டுவிட்டது. நம் முடைய முன்னோர்கள் மிகத் துணிந்தவர்கள். இதை எல்லாம் பார்த்துப் பயப்படுவதில்லை.

பின் ஏன் ஈடுபட்டார்கள்? அந்தச் சொற்களிலே உள்ள ஒழுங்குநிலை. அவர்களின் உள்ளத் தின் அடித்தளத்தில் இருந்து சொற்கள் வருகின்றன. ஆகை யால் ஈடுபட்டார்கள். இப்போது அடுத்த படிக்குப் போகிறோம். கேள்வி கேட்பார்களல்லவா, எந்தக் கட்டுப்பாட்டில் சமுதாயம் இருக்கிறது? இதை நம்பினால் கூட, குட்டிச்சுவர் ஆகிவிட்டது; இதற்கு எப்படிப் பதில் கொடுக்க முடியும்? ஆமாம், இந்த உலகம் இப்படித்தான்; எங்கள் ஆண்டவனை நம்பினால் அதில் இருந்து விடுதலை தருவான் என்று சொல்லலாம். That is one of saying. அப்படி என்றால் சாத்தான் சமாச்சாரம் வந்து விடும். அதனால் இவர்கள் என்ன பண்ணினார்கள் என்றால் 'அப்படி இல்லையப்பா, துன்பமென்று நினைக்கிறாயா, அது அவன்தான்; இன்பமென்று நினைக்கிறாயா, அதுவும் அவன்தான்; விடுதலை என்று நினைக்கிறாயா, அதுவும் வனைத் தேடிப் போகின்றவனுக்கு அவன்தான்; பஞ்சமென்று நினைக் கிறாயா, அதுவும் அவன்தான்.' -- புதிய தத்துவம் தோன்றுகிறது. இப்போது சமுதாயத்தை ஈர்க்க வேண்டுமென்றால் இரண்டு முறைகளிலேதான் பதில் கொடுக்க முடியும். ஏனென்றால் சமணன் கிளப்பி விட்டான்; ஈவில் என்றால் என்ன என்ற கேள்வி வரும்போது அதற்கு ஒரு அர்த்தத்தைக் கற்பித்துத் தனி யாக விட்டு விட்டால் அது வேறு. கிருத்துவர்கள் கொடுத்த பதில் அது. சைவர்கள் அதைக் கொடுக்கத்தயாராக இல்லை.

ஏனென்றால், அப்படிக் கொடுத் தால் இரண்டு கர்த்தர்கள் ஆகி விடும். சில வீடுகளில் யார் தலைவன் என்று கல்யாணம் ஆகிற அன்றைக்கு ஆரம்பித்து இரண்டு பேரில் ஒருவர் நான்கு பேர் தலையில் போகிற வரைக்கும்

அந்தப் போராட்டம் நடக்கும். இவர், தான் தலைவன் என்று நினைப்பார். அந்த அம்மா, தான் தான் தலைவி என்று நினைத்துக் கொண்டிருப்பார். பல சமயங்களில் இரண்டு பேரும் இல்லாமல் வேறு ஒருவர் தலைமை தாங்கிக் கொண்டிருப்பார். அது வேறு சமாச்சாரம். ஆக இரண்டு பேர் வந்தால் ... 'டியூயாலிடி' ... அது நடக்கவே நடக்காது. 'ஈவில்' என்பதைத் தனியாகப் பிரித்தால் 'டியூயாலிடி' வரத்தான் செய்யும். ஆகவே இவர்கள் பிரித்தார்கள். ''பந்தமும் வீடும் இவை பண்ணினீர்''.

அதற்கு மேல் ஒரு படி போகிறார் ''பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை, போகமும் திருவும் புணர்ப்பானை'' என்று சொல்லுகிறார். இவையெல்லாம் பண்ணினால் 'ஈவில்' வருமா, வராதா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். பொன்னும் மெய்ப் பொருளும் தந்தான்; போகத்தையும் திருவையும் புணர்த்தினான். மனிதன் தானே!

சோமர் சட்மாம் இந்தியாவிற்கு வந்தான். இங்கே வந்து திருவனந்தபுரத்தில் நாராயண ஆசிரமத்தில் கொஞ்ச நாள் தங்கினான். அவன் உபநிஷதத்தை அடிப்படையாக வைத்து எழுதிய நாவல்தான் 'ரேஸர்'ஸ் எட்ஜ்' என்பது. வாள் முனையில் நடக்கிறது போல உலகத்திலே இன்பத்தை அனுபவிப்பது. சுந்தர மூர்த்திகள் அனுபவித்தார் என்கிறோம். 'டிஸ்டிங்ஷன்' அங்கே தான் வருகிறது. அனுபவம் 'பாக்ட்' எல்லோரும் அனுபவித்தார்கள். ஆனால் இவரைப் பொருத்தமட்டில் எப்படி என்றால் கம்பியிலே நடக்கிறான் பாருங்கள் அவனைப் போல். அவனுடைய பேலன்ஸ் முழுவதும் கட்டை விரலுக்கும் முதல் விரலுக்கும் நடுவிலே இருக்க வேண்டும். சென்ட்ரல் கிராவிடி, விழுந்தால் கீழேதான். ஆக மொத்தம் சென்ட்ரல் கிராவிடி நடுவில் கொடுக்கப் பயிற்சி பண்ணினால் அதில் ஒன்றும் அதிசயமில்லை. அதுபோல் எந்த இன்பத்திலே தோய்ந்தாலும், புணர்குவடைச் சார்பாக வாழ்ந்தாலும் சொல்வார்கள்,

''மெய்த்திருப்பதம் மேவென்ற
போதிலும்
இத்திருத் துறந்து ஏகென்ற போதிலும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும்

என்று. அதுபோல ஒரு பழக்கம் பண்ணிவிட்டார்கள். புணர் குவட்டில் இருந்து கொண்டு திருவருளை நினைத்தார்கள்.

சித்தாந்த சாத்திரங்கள்

மு. அருணசலம்

திருக்களிற்றுப்படியார்

இதுவரை திருக்களிற்றுப்படியாருக்கு எழுந்திருந்த சில பழைய உரைகளைப் பார்த்தோம். நூலினுட் கூறப்பட்ட சில பொருள்களை இனிச் சுருக்கமாகப் பார்க்கலாம். திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் இரண்டுமே அனுபூதி நூல்கள். எனினும், உந்தி முழுமையும் அனுபூதி வாக்காயிருக்க, அதற்கு விளக்கமாக வந்த களிற்றுப்படியில் பல வரலாற்றுச் செய்திகள் சொல்லப் படுகின்றன. மூலத்துக்கு இது விளக்கமாதலால் இவை தேவை போலும். சொல்லப்பட்ட பொருள்கள் சிலவற்றை மட்டும் தொகுத்து இங்கே கூறுவோம்.

முதலாவதாகத் தம்முடைய குருவைக் குறிப்பிட்ட செய்தி முன்னமேயும் சொல்லப்பட்டது. 96 ஆம் பாடலில் திருவியலூரில் தோன்றிய சிவயோகியாகிய ஆளுடையதேவ நாயனர், தம் பொருட்டாகக் குருவாக வந்து, தம்முடைய பேரானந்தமாகிய திருக்கூத்தை எனக்கு அளித்து என்னுடைய ஊனத்தை ஒழிப்பித்தார் என்று சொல்கிறார். திருவுந்தி பாடிய திருவியலூர் உய்யவந்த தேவர் தம் குரு என்று யாரையும் குறிப்பிடவில்லை.

இரண்டு திருக்குறட்பாடல்களை எடுத்து ஆளுகிறார். சார் புணர்ந்து சார்புகெட ஒழுகின் என்ற பாடல் 34 ஆம் பாடலில். மற்றது, வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்ற பாடல். 40.

நாயன்மார்களில் பதினொருவர் இங்குச் சொல்லப்படுகின்றனர். அப்பர் சுவாமிகள் – அவருடைய அற்புதச் செயல்கள் பல; அரிவாட்டாய நாயனர், கோட்புலி நாயனர், சண்டீசர், சிறுத் தொண்டர், திருக்குறிப்புத் தொண்டர், மங்கையர்க்கரசியார், மூர்க்க நாயனர், மூர்த்தி நாயனர். சம்பந்தருடைய செயல்கள் பல. அவற்றுள் சிறப்பானது ஒன்று. பாலைநெய்தல் பாடியது (70). இதை

நம்பியாண்டார்நம்பி குறிப்பிட்ட போதிலும் சேக்கிழார் குறிப்பிட வில்லை. சுந்தரமூர்த்தி நாயனர் செயல்கள் சில.

சேந்தனருடைய செயலை அருமையாகக் குறிப்பிடுகிறார். சேந்தனர் வரலாறு வேறெங்கும் சொல்லப்படாதது. இவர் மூன்று திருவிசைப் பாக்களும் ஒரு திருப்பல்லாண்டும் பாடிய அருமைப்பாடு உடையவர். இவர் கூறும் வரலாற்றில், சொல்லும் முறையாலேயே மனத்தை அவிழ வைக்கிறார்:

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க – கவிழ்ந்த சடை
வேந்தனர்க் கின்னமுதம் ஆயிற்றே, மெய்யன்பிற்
சேந்தனர் செய்த செயல். 53

என்பது பாடல். சம்பந்தர் (70), திருவாமூராளி (71), வன்தொண்டன் (72), திருவாதவூராளும்தேன் (73) என்றுமுறையாக நால்வருடைய அருட் செயல்களையும் இவ்வாசிரியர் சொல்கின்ற முறையால், திருவாதவூரர் மற்ற மூவருக்கும் காலத்தால் பிற் பட்டவர் என்பது பெறப் படுகின்றது. திருவாதவூரரின் திருவாச கத்தைக் குறிப்பிடும்போது மூன்று திருவாசகப் பாடல்களைக் குறிப் பிடுகிறார். அன்பே என் அன்பே, கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை, சிவன் எனவே தேறினன் யான் என்ற இடங்கள்.

இவர் சம்பந்தர் பற்றிக் கூறிய ஒரு பாடல் பிற்காலத்தில் சிவப்பிரகாச சுவாமிகளை அருமையாக ஒருபாடல் நால்வர் நான்மணி மாலையில் சொல்ல வைக்கிறது.

சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்–சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு.

இக்கருத்தைச் ஏற்று சிவப்ரகாச சுவாமிகள் பாடிய பாடல் பின் வருவது:

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலை சுரந்த அன்னையோ, முன்நின்–நிலைவிளம்பக்
கொங்கை சுரந்த அருட் கோமகளோ, சம்பந்தா,
இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு,

இவ்வாறு திருக்களிற்றுப்படியார் அழகிய வெண்பாப் பாடலில் பல வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுவது அறியத்தக்கது. பல பழமொழிகளையும் இவர் அமைத்துப் பாடுகிறார். மற்றும் திருவுந்தியாருக்கு விளக்கமான அனுபூதிச் செய்திகளும் இதில் நிரம்ப உள்ளன.

திருவுந்தியாருக்கும், திருக்களிற்றுப்படியாருக்கும் நேரான பாடல்களைப் பின்வரும் அட்டவணையில் காண்க.

உந்தியார்	களிற்றுப்படியார்	உந்தியார்	களிற்றுப்படியார்
—	1–3		
1	4-5	23	42-43
2	6–7	24	44-45
3	8	25	46-50
4	9-10	26	51-52
5	11	27	53-54
6	12-13	28	57
7	14-21	29	58-62
8	22	30	63-64
9	23-24	31	65-68
10	25	32	69-75
11	26-	33	76
12	27–28	34	77
13	29	35	78-79
14	30	36	80-81
15	31	37	82-83
16	32	38	84
17	33	39	85-91
18	34	40	92
19	35	41	93-94
20	36-37	42	95-96
21	38–40	43	97-99
22	41	44	100
		45	—

"உங்கள் ஜாதக பலன்"

13—7—1983 முதல் 31—1—1985 வரை இராகு-கேதுப் பெயர்ச்சிப் பலன் 1 1/2 ஆண்டுகளுக்கு 12 ராசிகளுக்கும் முழுப்பலன் அரியநூல். விலை ரூ. 4-00 ரூ 4-50 M. O. செய்க.

C. N. நாச்சியப்பன், தயாரிப்பு
பொன்னழகம்மை நூலகம்.
137. கண்டனூர் ரோடு.
காரைக்குடி 623 001.

இதமான வாழ்வுக்கு எளியவழிகள்

1. காது செவிடுக்கு

முருங்கைவேர், கொன்றைவேர், சமமாக எடுத்து சாறு பிழிந்து தினம் 3 துளியாகச் சில தினங்கள் விட குணமாகும்.

2. பீனிசம்

துளசி இலையின் சாறு, வில்வ இலை சாறு, தேங்காய் எண்ணை சமனளவு எடுத்துக் காய்ச்சி காலையில் மூக்கில் இரண்டு சொட்டு உறிஞ்சிவர பீனிசம் குணமாகும்.

3. வயிற்றிலுள்ள பூச்சிகள் நீங்க

வெறும் வயிற்றில் அஞசி பழத்தை கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் நீங்கும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

வாடா மல்லிகை

தருமையாதீனப்புலவர்

டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பி. எச் டி.

காட்சி 1

இடம் : திருமுனைப்பாடி நாட்டில், நரசிங்கமுனையர் அரண்மனை.

காலம் : பகற்போது

உறுப்பினர் : நரசிங்கமுனையர், அரசி அமுதவல்லி.

[அரசர் நரசிங்கமுனையர் ஆழ்ந்த ஆலோசனையில் ஈடுபட்டிருக்கின்ருர். அரசி அமுதவல்லி வந்ததுகூடத் தெரியாமல் அரசரின் ஆழ்ந்த சிந்தனை. மெல்லிய சோகம் பின்னணியாக அரண்மனைப் பாடகனின் வீணையின் மெல்லிய நாதவெள்ளம் இழையோடிக் கொண்டிருக்கின்றது]

அமுத : அரசே !......அரசே !

நர : [சிந்தனையில் ஈடுபட்டபடியே] இம்...இம் [நெடுமூச்சு விடுகின்ருர்]

அமுத : நடந்தது நடந்துவிட்டது, அதையே தாங்கள் எண்ணிக் கொண்டிருப்பதால்......

நர : அமுதா! (கண்ணீர் ததும்பி)... மறக்கத்தான் முயற்சி செய்கின்றேன்; முடியவில்லையே, அமுதா! நான் என்ன செய்வேன்?

அமு : எல்லாம் அறிந்த தங்கள் மனத்திலும், இப்படி ஒரு கலக்கமா?

நர : "சென்றது இனி மீளாது!" — உண்மைதான்! உணர்ந்த உண்மைதான்! ஆனல் என்னுடைய வாழ்வில்......

அமு : நம்முடைய வாழ்வில் என்று சொல்லுங்கள். மன்னு! துன்பத்திலும் துணைநிற்பவள் உங்கள் அமுதவல்லி அல்லவா?

நர : வருத்தப்படாதே அமுதவல்லி! என்னுடைய சோகம் — கரை கடந்த வெள்ளமாகப் பெருகி - சொல்லைக்கூட தடுமாற வைக்கின்றது! நம் அன்புச் செல்வம்......

அமு : (கண்ணீரோடு) நம் இதயத்து அன்பையெல்லாம் கொட்டி வளர்த்த இளங்கொழுந்து மழலை கூறி மனத்தில் பேரின்பத் தென்றலை வீசி நின்ற பசுஞ்சோலை! ... ... நம்பியவரைக் கெடுக்க ஏனோ இந்த ஊழ்வினைக்கு இவ்வளவு அவசரம்!

நர : ஊழ்வினைக்கு அவசரம் இல்லை அமுதா. அது திட்டமிட்டுத் தான் மெல்ல, மெல்லத் தன் வலையை விரித்திருக்கின்றது! நாம்தான் இப்போது கண்களைக் குளமாக்கிக் கொண்டு வேதனைத் தீயில் துடிக்கின்றோம்.

அமு : ஆம், சுவாமி! ஊழ்வினை மெதுவாகத்தான் கைவரிசையைக் காட்டியிருக்கிறது! நாம்தான் அறியாமைத் திரையில்...... ஆம்! இப்போது நடந்தது போலிருக்கிறது! பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் உருண்டோடி விட்டன பார்த்தீர் களா?

நர : ஆ! ......அந்த நாள்தான் எவ்வளவு இன்பமானது! நம்பியைக் கண்டதும் அவனது பெற்றோரைச் சந்தித்ததும், அந்தப் பிறைமதியோடு நம் அரண்மனை நோக்கி நாம் வந்ததும் ...... ஆ... கா! (விம்மல்) எவ்வளவு சுவையான சம்பவங்கள் அமுதா!

அமு : திருநாவலூர்க்கு நாம் முதன்முறையாக வழிபாட்டிற்குச் சென்றபோது ...... நம் வினை எப்படியெல்லாம் நம்முடன் விளையாடி மகிழத் தொடங்கிவிட்டது பார்த்தீர்களா அரசே!

நர : இப்போது நினைத்தாலும் ...... என் இருண்ட நெஞ்சத்திலே அந்த இனிய நினைவுகள் ஒளிக் கீறல்களாகப் பாய்க்கின்றன! அந்த அமுத ஒளியிலே — நம் நம்பியின் தெய்வீக அழகு சொட்டும் திருமுகம்! ......

ஓ! ...... என் மனமே! உனக்குத்தான் அந்தப் பழைய நினைவுகளை அசைபோடுவதில் என்ன சுகம்! ... .. என்ன சுகம்!

காட்சி 1 - அ

[காட்சி மாற்றம்; நினைவுக் காட்சி]

[திருநாவலூர்ச் சிற்றூரிலே - புழுதி படியும் வீதியிலே கோயிலை அடுத்த அர்ச்சகர் சடையனார் வீட்டின் முன் புறத்தில் நம்பியாரூரர் தன் இளைய தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றார்]

தோழன் 1 : ஏய் நம்பி! இப்படி வாடா! என்னோடு விளையாடலாம்!

தோழன் 2 : அதெல்லாம் கூடாது. நம்பியாரூரன் என்கூடத்தான் விளையாடுவான்! ...... இதோ பார்! நம்பி! உன்னுடைய இந்த அழகிய சின்ன மரத்தேரை என்பக்கம் இழுத்து வாடா!

தோழன் 1 : முடியாது நம்பி! முடியாது! நான்தானே முதலில் கூப்பிட்டேன்! இந்தப் பக்கம் வாடா!

தோழன் 2 : நம்பி என்னுடன் தானே விளையாடுவது வழக்கம்! இல்லையா, நம்பீ!

நம்பியாரூரர் : நண்பர்களே! ஏன் இப்படி வம்பு செய்கின்றீர்கள்? நான் உங்கள் இருவருக்குமே தோழன்தான்! ஒற்றுமையாக இருப்போம்!

இருவரும் : ஆமாண்டா, அதுதான் சரி! நம்பியாரூரன் நறுக்குத் தெறித்தாற்போல் நாலே நாலு வார்த்தை சொன்னாலும் சரியாகத்தான் சொல்லுவான்!

நம்பி : என் தோழர்களே! ஒன்றுபட்டால் தான் இன்பம்! சண்டை செய்து சண்டை செய்து துன்பமே காண்பது சரியன்று! அதிலும் நாம் எல்லாம் இறைவனுக்கு வழிபாடு செய்யும் ஆதிசைவர் வீட்டுப் பிள்ளைகள்! நாம் வம்பு செய்து பொழுதை வீணாக்கலாமா? அது நம் பெரியவர்கள் வழிபாடு செய்யும் ஆண்டவனுக்கு அடுக்குமா, கூறுங்கள்!

இருவ : உண்மைதான் ஆரூரா உண்மைதான்!

தோழன் 1 : நம்பீ! உன்னோடு விளையாடிப் பொழுது போக்குவ தென்றால் எங்களுக்கு அவ்வளவு ஆசை! கோபம் வேண்டா மடா!

நம்பி : நண்பர்களே! இதோ இந்தச் சிறிய தேரைப் பார்த்தால் —நம் ஊர்திருவிழாவின் போது வீதிகளில் இழுத்துவரும் அந்த தேரைப் போலவே இல்லை?

தோழன் 2 : ஆம்; நம்பி! ஆம்! அதிலும் ஐம்படைத் தாலி - மணிச் சுட்டி - பைம்பொன் அரைநாண். இந்தக் காலைநேரத்து வெயிலில் பளபளக்க நீ தேரை இழுத்து வருவது ...... முருகப்பெருமானே வருகிறது போல இருக்குமடா, நம்பீ!

நம்பி : அதோ பாருங்கள்! காலை இள வெயிலில், நம் கோபுர கலசம் மின்னுவது இன்னொரு சூரியன்போல் இருக்கிறது!

தோழ : நம்பீ! நம்பீ! அதோபார்! ஆட்கள் குதிரைமேல் வருகிறார்கள்! முன்னாலும் பின்னாலும் பலபேர்வர இரண்டு பல்லக்குகள் வருகின்றன!

தோழ : ஆமாண்டா! ஆமாம்! எவ்வளவு அழகான பல்லக்குகள்! [மன்னர் நரசிங்கமுனையர், அரசியோடு வரும் இரண்டு பல்லக்குகளும் காலாள் வீரர்களும் வரும் ஆரவாரம்; பேரொலி]

நம்பி : நண்பர்களே! வாருங்கள்; நம் தேரை இழுத்துக்கொண்டு வீதி ஓரம் - வீட்டு முன்புறம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்போம்!

[வீட்டுக்குள்ளிருந்து சடையனார் வெளியே ''நம்பீ!'' ''நம்பீ'' என்று கூப்பிட்டுக் கொண்டே வருகின்றார்]

சடையனார் : நம்பியாரூரர! செல்வமே! அதோ நம் மன்னர்பிரான் வருகின்றார்கள், பார்த்தாயா? வீரர்கள் வருகின்றார்கள்! வா இப்படி! வாடா கண்ணே, என் பக்கம் வந்து என் கையைப் பிடித்துக் கொள்ளடா, கண்ணு!

(நம்பியாரூரன் தந்தையின் கையைப் பற்றிக் கொண்டு நிற்க)

நம்பி : அப்பா! அப்பா! நம் அரசர் மிகவும் நல்லவர்! ...... இல்லையா அப்பா?

சடை : ஆமாம், நம்பீ! மிகவும் நல்லவர்! இல்லையென்றால், நம் திருமுனைப்பாடி நாடு இவ்வளவு வளம் கொழிக்கும் திருநாடாக இருக்க முடியுமா? இதோ ...... பல்லக்கு நம் வீட்டுக்கு மிக மிக நெருங்கி வருகின்றதே!

[பல்லக்குகள் நிற்கின்றன]

வீரர்கள் : திருமுனைப்பாடி நாட்டை ஆளும் மாமன்னர்! ...... இராஜாதி ராஜ ...... இராஜ மார்த்தாண்ட ...... இராஜ குலதிலக ...... இராஜ கம்பீர ...... நரசிங்க முனையர்!

அனைவரும் : வாழ்க! வாழ்க!

நர : [பல்லக்குள்ளிருந்து குரல்] வீரர்களே! பல்லக்கை நிறுத்துங்கள்!

[பல்லக்குகள் நிற்கின்றன; அரசரும் அரசியும் இறங்குகின்றார்கள்]

நர : ஆ ...... கா! யார் இந்த அழகு ததும்பும் சிறுவன்? தெய்வீக ஒளி ததும்பி வழியும் அழகு முகம்! அமுதவல்லி! இந்த ஒளிவிளக்கைப் பார்த்தாயா?

சடை : வணங்குகின்றேப்; மன்னர்பிரானே! நம்பீ! அரசரை வணங்கடா, கண்ணு!

நம்பி : அப்படியே அப்பா!

[அரசர் பிரானுக்குச் சிறுவன் வணக்கம்; அரசியாருக்கும் நம்பியாரூரன் வணக்கம்]

அமுத : (மகிழ்ந்து) அடே! இந்த இளைய முருகனுக்குப் பிழையில்லாமல் பேசக் கூடத் தெரியுமா? தம்பீ! இங்கு வா!

(சடையனாரை விட்டு விலகி அரசியார் பக்கம் சென்று நிற்கின்றான் நம்பியாரூரன்)

நர : சிவ வேதியரே! தங்கள் மகனா?

சடை : (பணிவோடு) ஆம், அரசர் பெரும! தங்கள் வருகை தெரிந்து ...... வழியேரம் ஒதுங்கத தெரியாத ......

நர : தவறு! தவறு! ...... பல்லக்குத் தொலைவாக வரும் போது இந்தப் பால்வடியும் முகத்தை நான் பார்க்கத் தவறவில்லை! ஒதுங்கி நின்று கொண்டான். உங்கள் அருமை மகன்! அமுதா நம்பியாரூரனும் நம்முடன் வழிபாட்டிற்கு வரட்டுமே!

அமு : நன்றாகச் சொன்னீர்கள், அரசே! நம்பீ! எங்களுடன் கோயிலுக்கு வருகிறாயா?

நம்பி : ஓ! ...... வருகிறேன் மகாராணி!

சடை : அரசே! வாருங்கள். வழிபாட்டிற்குச் செல்வோம்! (தனக்குள்) அரசியாரின் கைகளை எவ்வளவு அன்போடு பற்றிக்கொண்டு நடக்கிறான் ஆரூரன்! அரசியார் கண்களில் தான் எத்தனை மலர்ச்சி!

நர : பல்லக்குகள் இங்கேயே நிற்கட்டும். அமைச்சரே! அர்ச்சகரே! வாருங்கள். இதோ இருக்கிறது கோபுர வாயில்; நடந்தே செல்லுவோம்! (நடக்கின்றார்கள்)

நர : (தமக்குள்) எவ்வளவு அழகான பிள்ளை இவன்! சுந்தரம் பொங்கி வழியும் 'சொர்ண முகம்!' அரசியோடு நடந்து வரும் அழகில்தான் எவ்வளவு கம்பீரம்! (வெளிப்படையாக) அமுதா! இந்த முறை திருநாவலூர் வழிபாடு மறக்க முடியாததாய் இருக்கும் போல் இருக்கிறதே? இம் ......

அரசி : (நாணத்துடன் கூடிய மகிழ்ச்சிச் சிரிப்பொடு) ஆம்; அரசே! உள்ளே சென்று தரிசிப்பதற்கு முன்பே — திருமுருகனே நம்மை வரவேற்க வந்துவிட்டது போல இல்லை?

(கோயிலுக்குள் செல்கின்றார்கள்; கோயில் மணி ஓசை; வழி பாட்டுப் பேரொலி;)

காட்சி 1 ஆ

(சடையனார் வீட்டு முன்புறம்; அரசர் முதல் எல்லோரும்)

நர : வேதியரே! இன்று நாம் செய்த வழிபாடு 'ஆத்ம திருப்தியை' அளித்ததுபோல் இதற்குமுன் என்றும் இருந்ததில்லை; இல்லையா, ராணி?

அமுத : ஆம், அரசே! என்றும் அறியாத பேரின்பம் கிட்டிற்று எனக்குப்!

சடையனார் : திரு நாவலூர்ப் பெருமான் திருவருள் அரசே!

நர : அந்தணரே! தங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று எண்ணுகிறேன் தவருகப் புரிந்து கொள்ள மாட்டீர்களே?

சடை : அரசே! எளியேனிடமா? தயக்கம் ஏன் மன்னர் பெரும? கேளுங்கள்! எங்கள் உயிர்க்கு நிகரான அரசர் பிரான் தாங்கள்; தங்களுக்குத் தயக்கமா?

நர : (சுற்றிப் நிற்கும் பரிவாரங்களைக் குறிப்பாக நோக்க அனைவரும் விலகி நிற்கின்றார்கள்; அரசியின் கைகளைப் பற்றியவாறே நம்பியாரூரன் நிற்கின்றான்)

திருநாவலூர்ப் பெருமானே முப்போதும் தொட்டுப் புனிதம் அடைந்த திருவுள்ளம் கொண்ட சடையனாரே! தாங்கள் மறைமழி நிற்கும் மாவேதியர்! இன்று தங்கள் மகனை — அன்புச் செல்வத்தை — நம்பியாரூரனைக் கண்டது முதல் நானும் அரசியும் கொண்ட மகிழ்ச்சி கொஞ்சம் அன்று!

சடை : நான் செய்த தவம், அரசே! என் துணைவி இசைஞானியும் நானும் செய்த தவந்தான் ஏன்னே! இல்லையேல் இந்த நாட்டின் முடிமன்னரை எளியேன் குடில்முன் நீண்ட நேரம் பார்க்கும் பெறும்பேறு வாய்க்குமா எங்களுக்கு?

நர : வேதவிதி வழுவாத 'வேத வித்தாக' விளங்கும் வித்தகரே! திருமுனைப்பாடி அரண்மனையின் உயரம் விண்ணை அளாவியது; அதன் தூண்கள் உயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப் பெற்றவை; அதன் மண்டபங்கள் விசாலமானவை! நறுமணம் விரியும் நந்தவனங்கள் அங்கு உண்டு! தென்றல் விளையாடும் அந்த அரண்மனையின் பளிங்குத் தரையிலே பவழக்கால் பதித்து விளையாட ... ...

சடை : (உணர்ச்சிப் பெருக்கோடு) புரிகிறது, அரசே, புரிகிறது! தங்கள் இனிய நெஞ்சிலே, தேவியார் பூ மனத்திலே இழையோடும் துன்பக் கோலத்தின் புள்ளிகள் விளங்குகின்றன, அரசே! அழைத்துச் செல்லுங்கள் ஆரூரனை!— அழைத்துச் செல்லுங்கள்!

நர : (உணர்ச்சி ததும்ப) 'வேண்டத் தக்கது அறிவோய், நீ! வேண்ட முழுதும் தருவோய் நீ!'' பெருமானே! உன் சித்தம்! சடையனாரே! தங்கள் பெருந்தன்மை மிக்க நெஞ்சத்திற்கு ... ... எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை!

சடை : மன்னர் பிரானே! இந்த நாட்டை ஆள, ஒரு சிங்கக்குட்டி பிறக்கும் வரை தங்களுடனேயே நம்பியாரூரன் தங்கட்டும்!

நர : நூல் பல கற்ற வித்தகரே! தங்கள் வாழ்த்து என்னைப் புல்லரிக்கவைக்கிறது! நம்பியாரூரான்- அரசக்குடியிலே பிறக்காவிட்டாலும் அவன் அந்தணர் குலத்திலே நாடாளப் பிறந்த சுந்தரனாகவே விளங்குவான், இது உறுதி!

(வளரும்)

திருக்கணித பஞ்சாங்கம்

தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

ருத்ரோத்காரி-வைகாசிமீ (1983 - மேமீ - சூன்மீ)

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

தமிழ்வ	ஆங்கிலப்வ	கிழமை	திதி		நட்சத்திரம்	
1	15—5—83	ஞாயிறு	திரிதியை	18-31	மிருகசிரிஷம்	18-46
2	16—5—83	திங்கள்	சதுர்த்தி	16-04	திருஆதிரை	17-06
3	17—5—83	செவ்வாய்	பஞ்சமி	13-35	புனர்பூசம்	15-24
4	18—5—83	புதன்	சஷ்டி	11-10	பூசம்	13-34
5	19—5—83	வியாழன்	சப்தமி	8-52	ஆயில்யம்	12-17
6	20—5—83	வெள்ளி	அஷ்டமி	6-44 }	மகம்	10-57
			நவமி	28-49 }		
7	21—5—83	சனி	தசமி	27-09	பூரம்	9-51
8	22—5—83	ஞாயிறு	ஏகாதசி	25-47	உத்திரம்	9-00
9	23—5—83	திங்கள்	துவாதசி	24-45	அஸ்தம்	8-28
10	24—5—83	செவ்வாய்	திரயோதசி	24-08	சித்திரை	8-18
11	25—5—83	புதன்	சதுர்த்தசி	23-58	சுவாதி	8-32
12	26—5—83	வியாழன்	○பௌர்ணமி	24-18	விசாகம்	9-14
13	27—5—83	வெள்ளி	பிரதமை	25-08	அனுஷம்	10-26
14	28—5—83	சனி	துவிதியை	26-30	கேட்டை	12-08
15	29—5—83	ஞாயிறு	திரிதியை	28-09	மூலம்	14-19
16	30—5—83	திங்கள்	சதுர்த்தி	நாள்முழுவதும்	பூராடம்	16-55
17	31—5—83	செவ்வாய்	சதுர்த்தி	6-30	உத்திராடம்	19-49
18	1—6—83	புதன்	பஞ்சமி	8-55	திருஓணம்	22-50
19	2—6—83	வியாழன்	சஷ்டி	11-22	அவிட்டம்	25-46
20	3—6—83	வெள்ளி	சப்தமி	13-38	சதயம்	28-25
21	4—6—83	சனி	அஷ்டமி	15-30	பூரட்டாதி	நாள் முழுவதும்
22	5—6—83	ஞாயிறு	நவமி	16-47	பூரட்டாதி	6-35
23	6—6—83	திங்கள்	தசமி	17-16	உத்திரட்டாதி	8-08
24	7—6—83	செவ்வாய்	ஏகாதசி	17-16	ரேவதி	8-58
25	8—6—83	புதன்	துவாதசி	16-22	அசுவனி	9-03
26	9—6—83	வியாழன்	திரயோதசி	14-50	பரணி	8-28
27	10—6—83	வெள்ளி	சதுர்த்தசி	12-43	•கிருத்திகை	7-15 }
					ரோகணி	29-34 }
28	11—6—83	சனி	●அமாவாசை	10-07	மிருகசீரிஷம்	27-30
29	12—6—83	ஞாயிறு	பிரதமை	7-13 }	திருஆதிரை	25-14
			துவிதியை	28-06 }		
30	13—6—83	திங்கள்	திரிதியை	24-57	புனர்பூசம்	22-54
31	14—6—83	செவ்வாய்	சதுர்த்தி	21-52	பூசம்	20-38

சங்கற்பநிராகரணம் உரையும் விளக்கமும்

கு. சுந்தரமூர்த்தி M. A. திருப்பனந்தாள்.

ஈசன் நாம்செயப் பேசினன் அன்றி
இனையவை பிறரிற் கனவினும் இலனே
தன்னைத் துதிக்கும் சொன்னலந் தானுமந்
துறைஅறி வாணர்க் கறைவதொன் றன்றியும்
தனக்குத் தானே தன்நலம் பகரா(து)
அசத்துக் குரையா தார்க்குரை உயிர்க்கெனில்
உரைபிர மாணம் இறைபிர மேயம்
நீபிர மாதா நின்பிர மிதியென
நால்வகை யுளதுன தேகம்நன் றன்றே
நற்பிர மாணம் நிற்பதொன் றன்றால்
அப்பிர மேயமும் அதன்இயல் பன்றே
கன்னற் சுவையில் அன்னியம் இலதால்
இனிமை தோன்றாத் தன்மைத் தென்றனை
அறிவிற் குவமை அசத்தாம் கட்டி
பிறிவித் தொட்டினும் பேற துறாதே
தற்பர விரிவு பொற்பணி தகுமெனில்
செய்வோ ரின்றிச் செய்வினை இன்மையிற்
பொன்பணி யாகை தன்பணி யன்றே
செய்வோர் போலச் செயப்படு பொருள்முதற்
செய்வோர் ஏயாச் செய்யவும் படுமே
சுத்தி வெள்ளியில் தோன்றிற் றாயினும்
சத்துல கேதும் தாரா தருமெனின்
உலகம் மித்தை யென் றோரா துரைத்தனை
நிலவுநின் மரபு நினைந்திலை யாம்கொல்
விவகா ரத்தில் வேண்டுதும் உலகம்
பரமார்த் தத்தில் பகராம் என்னில்
பரத்துள தேல்இவை யும்பர மார்த்தம்
பரத்தில தேல்ஒழி முன்பகர் மாற்றம்
அதன்முதல் இதுவென உதவுக அன்றியும்
விவகரிக் குங்கால் திகழ்பர மார்த்த
நிலையது தெரியின் இதுநீ யேல்
தெரியா தாயின் அஃதும் தெரியா
துரையார் அளவையும் ஒழிந்தனை அன்றே
அளவை காண்டல் கருதல் உரையென

உளதவை மூன்றின் மொழிவழி நுழையின்
நின்பிர மேயம் என்பதெ னும்சொல்
பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாம்நின்
தற்பரம் அசித்தைத் தருமா றென்னெனில்
சிலம்பி நூல்தரு நலம்போல் தோன்றும்
என்றனை அது அதன்தொழில் அன்றியும்
ஒன்றுஅதன் இயல்புஉல குஒரியல்பு அன்றெனப்
பலம்இலை பழம்பூப் பாதவம் தரும்நீர்
திரைநுரை திவலை சிலதரும் இவைபோல்
தானே பலவாம் எனநீ சாற்றினை
சத்துஅசத் தாகவும் சத்தினில் அசத்தின்
கொத்துள் தாகவும் கூறினர் இலராம்
வித்திலை கனிநனி விழுதால் தருநெறி
சத்தல தொன்று தான்தர வேண்டும்
நெற்பதர் பலாலத் திற்குஉபா தானம்என்
காரண மின்றிக் காரியம் பிறவா
பாரிடை ஒருபடம் பண்ணவும் படுமே
அந்தமில் பிரமம் அவித்தைகா ரணம்எனத்
தந்தனை அவித்தை தான்எய் துறுதல்
தன்னியல் பென்னில் வன்னிதன் வெம்மையில்
சத்தின தியல்பும் சத்தே அசத்தெனில்
வைத்ததன் இயல்பெனும் வழக்மொழி அன்றியும்
இருள்பொதி விளக்கென வருமரு விளக்கில்
கருமை பயந்த பெருகொளி தகுமெனில்
தன்னியல் புஅன்று அதன் உபாதி வசத்தால்
மன்னிய தன்றுமைத் தான்தனி மாயாது
ஒன்றுஆன சுத்தன் அன்றும் அன்றே
ஆங்கொரு காலத்து ஓங்கிய தாயின்
அந்தமில் அவித்தை வந்தணை வதற்கோர்
ஏது வேண்டுப் புயல்இயல் புளனின்வீடு
ஓத வேண்டா ஒழிந்தோ ரினும்உறும்
களங்கம துறஉறும் அவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட் டாயின்
அவித்தை யென்பதுஒன்று அன்னியம் தன்னில்
உதிக்கும் என்றமுன் உரையும் மறந்தனை
நுண்ணூற் குடம்பை நுந்துழி போல்உட்
படுநெறி அதனுல் விடுநெறி இலதால்

தலைமையும் அறிவும் இலதென் அவித்தையை
விடுத்துஎடுத் துஆள் நரும் வேற்றோர் அன்றே
ஒளிகொள் தாமிரம் குளிகைபெற் றுங்குஅதன்
அவித்தையை வித்தை தவிர்க்குமென் றுரைக்கில்
நித்தன் அறிவன் சுத்தன்என் றுரைத்த
வித்தகம் என்நீ வித்தையும் வேறொன்று
எம்ம ேனோரில் ஒருவன் நின்இறை
அம்ம சைவந் தவன்நீ யன்றே.

பிரமாதா மறுப்பு-பெத்தம்:

பன்மணி பசுநற் பாத்திர மெனவும்
நன்னூல் பால்நீர் நற்கதிர் எனவும்
உடலையும் உணர்வையும் உவமித் தனையேல்
தடமணி சரடொடு தாம்கூ டலவே
உணர்வுணர் வொழியின் உலகுஉணர்வு உறின்நின்
பாலும் பசுவும் சாலும் சாலக்
கலம்பல அவன்றிச் சலம்பல இலதுஎனக்
காணுநர் இன்றி வீணின் விளம்பினை
ஆடியுள் நிழல்போற் கூடுதல் கூறின்
தன்நிழல் கொண்டு தற்பணஞ் சலிக்கின்
மண்நிழல் கொண்டுடல் வந்தகன் றிடுமே
மன்அயக் காந்தம் எனவுடல் பிரம
சன்னதி யளவிற் சலித்திடும் ஆயின்
அகண்டிதன் சன்னதி யலதில தெனவும்
நடந்திட வேண்டும் கிடந்திடப் பெறுவே
காந்தத்து இரும்பு காட்டுநர்ப் பெறில்அயம்
சேர்ந்திடும் நீக்குஞ் செயல் அதற்கிலதே
கனைத்துயர் கயிற்றர வெனுச்சில தொடுத்தனை
கனவின் பயனும் நனவின் பயனும்
வினையின் பயன்அவை பொய்யென வேண்டா
உடல்மா றுட்டக் கடன்அது கருதுக
உற்ற புற்றும் மற்றதிற் கயிறும்
உடலுங் கூடச் சடமென அறிதி
அறிவு கயிறுஎ ன்றுஅறியாது அன்றே
அச்சம தடைதல் கொச்சமை யுடைத்தே
இன்னுமக் கனவில் இருளுறு கயிற்றில்
பின்னும்நின் பிரமம் பிரமித்திடுமே

துன்னிய வினையிற் செம்மலர்ப் பளிங்கெனத்
தானுந் தகைமை யானுல் மலரென
ஒருபய னன்றிப் பலபயன் மரீஇய
திருவினை தருபயன் எனநனி வேண்டில்
ஆண்ட வித்தையும் அவித்தைக்கொடு ஆக்கையும்
ஈண்டுஇரு வினையும் இயம்பினை பரத்தைக்
கள்வரைப் பிணிக்கும் காவல ரெனமுயல்
தொல்வினைத் தொடக்கில் தோன்றுஉடற் சிறையிட்டு
இருவினை யூட்டும் எம்மான் அம்மான்
அருவினை உடற்கண் அவைத்தைகள் உரைத்தனை
ஆர்உறு பவர்பரம் அகண்டிதம் அடங்காது
ஒர்வில துஉடல்சடம் உறுநெறி யாதெனின்
மன்னிய கரண மாருட் டத்தில்
பன்னினம் என்னின் இவையோ பரமோ
முதலிய துஆயின் இவைபிறழ் வுஎய்தாது
இவையெனில் உனது மொழிபழு துஉளதே
உடற்படு பிரமம் உறுமேற் சாளரத்து
இடத்தகும் உறுவிரல் நுதியளி எறிதுயர்
அங்குலி தானே அருந்திடில் உடற்கண்
தங்கிய அறிவு தனித்துஉறும் அன்றே
தற்பண நிழற்கட் குற்றிபாய்ந்துஅற்ருல்
நற்கணிற் றுயரம் நணுகாத் தகைத்துஎனில்
நின்மொழி விரோதமும் காட்சி விரோதத்
தன்மையும் உறும் அவை தவறில ஆகா
யாம் உடைப் பதிவகை யாவரும் பலகலே
சொல்லுதல் எளிதுஅரிது அத்தொழில் புரிவெனட்
புல்லிய பழமொழி புதுக்கினை யன்றே
அகண்டித மெனநீ பகர்ந்தமை தனக்குப்
பந்தம் இதுவெனத் தந்தமை கருதில்
வானில் நடக்குங் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட ஒருவன் நீயன்றே.

சிவன் முத்தி மறுப்பு

பந்தம் அதுஅகல முந்து விவேகம்
வான்வளி யெனத்தனில் தானே தோன்றின்
முன்புள தாயின் மயங்கா திலதெனிற்

பின்புள தாகாது இலதுஉள தெனின்வெள்
மலரது தருமனல் மரக்கண் இன் றுகித்
தருவது தகுமெனில் தானே தோன்று
விறகின் உதித்த கனல்தகு மாயின்
அவித்தையின் உதித்த வித்தை அம்மரத்
துதித்த விவேகம் வித்தையென் றுரைத்த
வெப்தழல்அனைய விவேக முதித்த
இந்தனம் அனைய திறையில்அன் றற்றே
இற்படப் பிரிப்பின் மெய்ப்படும் எவற்றையும்
இதுஅன்று இதுஅன் றுஎனக்கழி காலே
அதுவே தானே யாயின தென்றனை
வித்தை முன்னர் அவித்தையும் அவித்தை முன்
வித்தையும் நில்லா வியன்ஒளி இருளென
இருள்அல் ஒளிக்கும் ஒளியல இருட்கும்
ஒருகா லத்தும் ஒருப்பயன் இலதால்
இரண்டையும் நுகரும் முரண்தரு விழியென
விதையும் அவித்தையும் உய்த்ததொன் றுளதே
தானே தானும் ஆனற் பயன்என்?
தன்னில் தன்னைத் தானே காணிற்
கண்ணிற் கண்ணைக் காணவும் படுமே
தன்நலம்அதனைத் தானே நுகரும்
என்னின் மூன்நலம் எய்தா திருந்ததுஎன்
கட்டி போலெனக் கதறினை இன்பம்வந்து
ஒட்டிடும் வித்தை யுடையைஆ யிடினஏ
தத்துவ மசிஎன வைத்தமுப் பதத்திற்
கொன்றே பொருளென் றன்றே பகர்வது
நீபுலி ஆயினை என்றுஆங் குஉணரின்
ஆயினை என்றுஅது ஆகு உவமைத்தால்
நோயா யினமேல் ஆயா யென்றால்
அகமே பிரம மாயின தென்றால்
சகமே அறியத் தான்வே றுஅன்றே
உண்மையிற் சலமில உடற்சஞ் சலமுறும்
வெண்மதி போல விளங்கிடு மென்றனை
அசலன் ஆகிச் சஞ்சல சலத்துச்
சலனம் மேவினம் எனமதி காண
வேண்டுமதன்றிக் காண்பவர் பிறரேல்
ஈண்டுஉனது ஏகம்என் செய்தது இயம்புக

பரமுத்தி மறுப்பு

உடல்விட கடத்துள் படுவெளி போல்எனில்
விட்டென் பெறஉடற் பட்டென் படமற்று
இகலற ஒருவன் இவ்வகை தெளியில்
அகிலமும் முத்தி யடைந்திட வேண்டும்
அறிந்தோர் முத்தி யடைந்தோ ராயின்
பிறிந்தோர் உயிர்பல பேதத் தன்றே

பதிஞானம் வாராதென்றது

கன்ம காண்டங் காரண மாக
மன்னும் விவேகம் என்னில் அவித்தைக்
கேது காரணம் ஓதினை யில்லை
இதற்குங் காரணம் விதித்தல்வேண் டின்றே
அரணியில் உதித்த கனல்அவை கவர்வுஎன
விரதத் துஉதித்த விவேகம் அதுஅழித்தல்
வருந்தி யாயினும் திருந்திய வேத
நீதி யெல்லாம் நீத்துப் போதமொன்
றறியார் தாமும் அவ்வழி நடத்தல்
பொறியோ போத நெறியோ இதுபவம்
நீங்கிடும் நெறிதரு பாங்கினைப் பழித்தல்
நன்றி கொன்றல் அன்றே அன்றியும்
ஞால நீதியும் நான்மறை நீதியும்
பாலர்உன் மத்தர் பசாசரி லெனவும்
உறங்கி னேன்கை வெறும்பாக் கெனவும்
தானே தவிரா துஅனல் புரியாது
ஒழிந்திடின் நிரயத் தழுந்துதல் திடமே
உய்த்தோ னன்றி முத்தி யுரைத்தல்
பித்தோ பிரமஞ் செத்தோ பெறுவது
உடலையும் நீயே சடமெனச் சாற்றினை
வையினும் வாழ்த்தினும் கொய்யினும் கொளுத்தினும்
வணங்கினும் உதைப்பினும் பிணங்குதல் செய்யாப்
பிரமத் தன்மை பெறுவதெக் காலம்
இருக்கு நாள்சில எண்ணில்நூல் கதறித்
தருக்கம் பேசித் தலைபறி யுற்றுக்
கண்டோர் ஈந்த பிண்டம்உண் டுஅலறிப்
பல்நோய் யாக்கை தன்னோ யுற்றுஉடல்
விடவரும் என்று நடுநடு நடுங்கி

விட்டோர் தெய்வத் தொட்டின் றுஅன்றியும்
யானே எவரும் ஆனேன் என்றலின்
அவ்வவர் சீறிய் அவ்வவர் வாழ்நாள்
செவ்விதின் நிரயஞ் சேர்த்துவர் அதனுல்
மாயா வாதப் பேயா உனக்குத்
தேவரில் ஒருவர்உண் டாக
மேவரு நரகம் விடுதலோ அரிதே.

வேதமும் அது சுயம்பு அன்று என்பதும்:-

(இ-ள்) நீ கட்டு நிலையிலும், வீட்டு நிலையிலும் கூறிய உன்னுடைய மதத்தின் துணிபு பிரமம் ஒன்றுமே உள்ளது என்று சொல்லுமிடத்து ஒன்று என்றற்குரிய ஏது என்னை என்னில், இதற்குப் பிரமாணமாகச் சொல்லப்பட்டது வேதமாய் இருக்கும் என்னில், அரிய வேதமானது பிரமம் ஒன்றுமே உள்ளது என்று சொல்லுவதன்றி உயிர், இறை என இரண்டு என்று சொல்லுவது நீ இட்ட பிரமாணத்துக்கு நன்ருகாது, வேதம் அப்படி இரண்டு என்றதும் ஒன்று என்னும் கொள்கையைச் சொன்னதாய் இருக்கும் என்னில், நீ ஒன்று என்றதற்கு இட்டபிரமாணம் இரண்டு என்றும், இரண்டல்ல என்றும் சொல்லவேண்டுவதில்லை, இரண்டு என்றும், ஒன்று என்றும், இரண்டும் ஒன்றும் என்றும் வேதம் சொல்லுவதெல்லாம் அந்தப் பிரமம் ஒன்றையுமாய் இருக்கும் என்னில், வேதம் இரண்டு என்ருலும் இரண்டல்ல என்ருலும், இரண்டுமாய் இரண்டல்லவுமாய் இருக்கும் என்ருலும், அமைவு பிறந்திருக்கும் உன்னுடைய ஐயத்தின் நீங்கிய மெய்நூலாலே ஆய்ந்து பார்க்குமிடத்து உன் மதத்திலே விளக்கப்பட்ட கொள்கைக்கு மாறுபாடு உண்டாகா நிற்கும், அப்படி கொள்கை வேறுபாடு காணும் அம்மறை, கட்டு நிலையில் இரண்டு என்றும், வீட்டு நிலையில் ஒன்று என்றும் சொல்லும் என்னில், மெய்ந்நூல்களில் கட்டு நிலையில் இரண்டு என்றும் வீட்டு நிலையில் ஒன்று என்றும் சொன்ன இரண்டு வகையும் ஆய்ந்து பார்க்குமிடத்து உன்னுடைய மெய்ந்நூல் அறுதி இல்லாததாம். ஆதலின் மெய் நூல் மாறுபாடு உண்டு என்பது தப்பாது. நான் ஒன்றற்கு ஒன்று மாறுபாடாய் இருக்கும் என்றது கொண்டு நீ இப்பொழுது அந்தப் பழைய மொழியாகிய வேதம் இரண்டு என்று சொல்லாது ஒன்று என்று சொல்லும் என்னில், மெய்ந்நூல் முன்னே இரண்டென்று சொல்லி இப்போது ஒன்று என்று சொன்ன குற்றம் அன்றியும், கட்டு நிலையில் உயிரும் இறையும் இரண்டாய் இருக்கும் என்றதும் வீட்டு நிலையில் உயிரும் இறையும் ஒன்ருய் இருக்கும் என்றதும் குற்றத்தை உடைத்தாம்; இவ்வாறு நான் சொன்ன வகையைப் பதருமல் ஆராய்ந்து பார்ப்பாயாக. அஃதொழிந்து எழுதப்படாத வேதம் ஆகிய இந்தப் பிரமாணம் யாராலே சொல்லப்

பட்டது, அஃது ஒருவரால் சொல்லப்பட்ட தன்று தானே தோன்றியது ஒன்று என்னில், நீ பிரமம் ஒன்று என்றது போய்ப் பிரமம் ஒரு முதலும் மறை ஒரு முதலும் ஆக உன்னுடைய ஒன்று எனும் கொள்கை பலவாய் பொருந்தா நிற்கும், இஃதன்றியும், ஒருவன் ஒலிக்காமல் ஒலியினுடைய வடிவம் தானாகத் தோன்றுது என்னில், விண்ணிலே ஒருவர் ஒலிக்காமல் ஒலியானது உண்டானாற்போல வேதமும் ஒருவர் கூறாமல் தானே உண்டாகும் எனில், விண்ணின் கண் காற்று ஏதுவாகக் கொண்டு ஒலி உண்டாவது ஒழிந்து வறிதே ஒலி தோன்றுது அன்றியும் பதம் என்றும் கிரமம் என்றும் பாழி என்றும் இன்னும் பல ஒலிகளும் பொருள்களுமாய் இருக்கும் வேதமானது; இப்படி விண்ணில் ஒலி ஒரு வகையாய் இருக்கும் அவ்வொலிக்கு அறிவு எனபது ஒன்றில்லை, இவ்வேதம் அறிவாயிருப்ப தொன்று. ஆகையால் அவ்விண்ணின் கண் உண்டாகிய ஒலி போலும் இந்த வேதம் என்று சொல்லலாகாது. வேதம் தானே உண்டாகாது என்றால் அவ்வேதத்தைச் சொன்னார் சிலர் வேண்டும். இதற்கு, இந்த உடலாலே சொல்லப்பட்டது வேதம் என்னில், இது முழுமையான அறிவற்றதாய் இருத்தலின் ஒரு ஒலியையும் பொருளையும் சொல்லமாட்டாது, அப்பிரமத்தினுடைய தன்மையை ஆராயின் அது வேறு பிரிக்கப்படாது ஒன்றுபட்டதாய் இருப்பதால் ஒலியையும் பொருளையும் அது இது என்று சுட்டிச் சொல்லும் பகுதி எங்ஙனம்? ஆகையால் எல்லாம் ஒன்றே என்று சொன்ன சொல்லையும் விட்டுவிட்டாயாகும்,

அரியவேதமானது அந்தப் பிரமத்தாலே அருளப்பட்டது என்னில், அப்பிரமம் எங்கும் நிறைந்தது ஆதலால் பல் நாக்கு முதலாகச் சொல்லப்பட்ட கருவிகள் இன்மையின் அப்பிரமத்தாற் சொல்லப்படாது, அவ்வாறாயின் பேயானது ஒருவன் உடலிலே நிலைபெற்று நின்று வருங்கால நிகழ்ச்சிகளைச் சொன்னாற் போன்று அப்பிரமமும் ஒருவன் உடலைச் சார்ந்துநின்று வேதத்தைச் சொல்லாநிற்கும் எனில்,

அவ்வாறு இவர்ந்து நின்றது தேவரையோ? ஓர் இருடியையோ? என்ற வினா எழும். அவ்வாறு ஒருவரைச்சார்ந்து நின்று சொன்னதாம் ஆகில் அது பசுவாக்கியம் ஆகையால் அச் சொல்லுக்கு அழியாமை உண்டாகாது,

அவ்வாறாயின் உலகம் அதனைச் சுயம்பு என்று சொல்லுவது ஏன் என்னில், அருவாய் நின்ற முதல்வன் உருக்கொண்டு தோன்றி அவ் வேதமும் அவனால் கூறப்படுதலின் இதைச் சொன்னவன் சுயம்பு ஆகையால் இந்த வேதத்தையும் சுயம்பு என்று உலகம் சொல்லாநிற்கும் என்று மேல் அறிவாயாக.

திருவிளையாடற் புராணம்

உரை நடை

மாயக்குதிரைகள் திரண்டுவரும் தோற்றம்

இந்த மாயமாகிய குதிரைக் கூட்டங்கள் மேற்றிசையினை நோக்கி நடந்தன. இறைவர் ஏறிய வேதமாகிய குதிரை இவற்றின் நடுவே சென்றது. குதிரைகளின் செலவால் மேலெழுந்த [1]புழுதிகள் எல்லாத் திக்குகளிலும் சென்று பரவின; அதனால் சூரியன் தான் செல்லும் வழியை அறியாது மயக்கமுற்றான்; அக்குதிரைகள் தம் நடையினாலே மேட்டினைப் பள்ளமாக்கின; பள்ளத்தை மேடாக்கின; தம் வாயிலிருந்து கொப்பளித்துச் சிந்தும் நுரை பூமி முழுதும் வெள்ளம்போல் நின்றது; குளம்பிலிருந்து எழும் புழுதி அவ் வெள்ளத்தை வற்றச் செய்து நிலமாக்கியது; செம்புழுதி எங்கும் பரவியபோது, ஆகாய கங்கை வையையாற்றினை ஒத்தது; சூரியனின் பச்சைக் குதிரைகள் ஏழும் சிவந்த குதிரைகளை ஒத்தன; திக்கு யானைகள் தம் முகங்களில் சிந்தூரம் அப்பியதுபோலத் திகழ்ந்தன. நடுப்பகல் மாலைப் பொழுதை ஒத்தது. நிலவுலகு, திசைகள், வானுலகு இவற்றை மூடிய புழுதியுள் மறைந்து வருகின்ற குதிரைகள் வழியிலே வருதலை, அவற்றின் சதங்கைமாலை, கிண்கிணிமாலைகளின் ஒலியாலும் கனைப் பொலியாலுமே மக்கள் அறிந்தனர்; கண்களால் காணாதவராயினர்.

ஆடவர் குதிரைகளைக் கண்டு கூறும் கூற்று

''இவை வாய் நுரைகள் அல்ல, கடல் அலைகள் வீசும் முத்துக்கள்'' என்றும், ''இவை குதிரைகளின் கனைப்பொலி அல்ல, கடல் அலைகள் ஒலிக்கும் ஒலியாம்'' என்றும், ''இங்கு வருபவை குதிரைகள் அல்ல, இப்பொழுதும் இந்திரன் மதுரையை அழிக்க வரவிடுத்த கடலாம்'' என்றும் கண்டோர் கூறுவர்.

''இக்குதிரைகள் முன் இந்நிலவுலகில் உள்ளன அல்ல; இந்திரனின் குதிரையோ எனின், அஃது ஒன்றே ஆதலின் அதுவல்ல; சூரியனின் குதிரைகளோ எனின், அவை ஏழு; அவ்வேழும் பச்சைக் குதிரைகள் ஆதலின் அவையுமல்ல; ஆதலால், இக்குதிரைகள் யாவை?'' என ஒருவரை ஒருவர் வினவுவர்.

---

1. குதிரைகளின் புழுதி மண்டிய இடம் 'மண்டியூர்' என வழங்குகிறது.

"பரிநூலின் இலக்கணங்கள் நிரம்பப்பெற்ற இக்குதிரைகள் நிலமகள் முதுகு கிழியும்படி வெகுண்டு எழுந்து வருதல், பாதலத்தில் வசிக்கும் அனந்தன் முதலிய பாம்புகளைப் பொருது அழித்தற்கோ? அல்லது வானுலகைப் பொருது அழித்தற்கோ அறியோம்" என்றும், "சோழன் உள்ளத்தையும், சேரன் உள்ளத்தையும், வாதவூரடிகளை வருத்தும் பாண்டியன் உள்ளத்தையும் சுடுதற்கோ அறியோம்" என்றும், "முன்னொரு காலத்தில் சுந்தரசாமந்தன் என்னும் ஒரு சேனைத்தலைவன் பொருட்டுப் பாண்டியன் முன்னே அளவிறந்த சேனைகளோடு குதிரைமீது இறைவன் வந்ததுபோல, இக்குதிரையில் வரும் வீரர், இன்று இம் மந்திரியாரின் துன்பத்தைப் போக்கும் பொருட்டு வந்தனரோ" என்றும் பலர் பலவாறு கூறுவர்.

பெண்கள் கூறும் கூற்று

பெண்கள், வேதமாகிய குதிரைமீது வரும் வீரனாகிய பேரழகனைக் கண்டு, "இவன் மன்மதனோ? அன்றி முருகனோ? மாயனோ? இந்திரனோ?" என ஐயுற்றனர்! அவருள் சிலர் அப்பேரழகனை அடுத்து நின்று அவன் அழகு அனைத்தையும் கண்ணாகிய வாயினால் பருகுவர்; கைவளைகளை மாலைக்கு விலையெனக் கொடுப்பர்; 'மாலை கொடாயேல் அவற்றின் விலையாகக் கொடுத்த எங்கள் வளைகளை எடுத்து எங்கள் கையில் இடுவாயாக' என்பர். வேறு சிலர் பேரழகன் திருமுடி மாலையினின்றும் சிந்திய மலர்களை எடுத்துத் தங்கள் கூந்தலிற் சூடி மதவேளை வென்று வெற்றிமாலை கொள்வர். மற்றுஞ் சிலர் பேரழகன் மார்பினின்றும் சிந்திய சாந்தினைத் தங்கள் மார்பில் பூசி அவனைக்கூடி மகிழ்ந்தவரை ஒத்தார். ஒருசிலர் "இப்பேரழகன் மார்பில் அணிந்த போர்வை நமது உயிரை அம்மார்பு கவராது தடுத்ததனால் அதற்குக் 'கவசம்' என்னும் பெயர் இட்டதுமெய்யே" என்பர். வேறு சிலர், "இப்பேரழகனின் சிரமாலை நமது உயிரை அகப் படுத்தினமையால் அது 'கண்ணி' என்று சொல்லப்பட்டது உண்மையே" என்பர்.

தமது இச்சையளவானே திருவுருவம் எடுக்கும் இறைவன், இந்திரசால வித்தை காட்டுவானைப்போல இங்ஙனம் குதிரை வீரனாகத் தன்னைக் காட்டி ஆடவரையும் மகளிரையும் மயக்கி நடந்தருளினார்.

தாவிவரும் குதிரைகள் ஐம்பொறிகளை ஒத்தன; அவற்றை நடத்திச் செல்லும் வீரர்களாகிய சிவகணத்தவர் மனங்களை ஒத்தனர்;

அம்மனங்கள்தோறும் பொருந்தி நின்று இடைபறுமல் இயக்கும் உயிர், நடுவே வரும் வேதமாகிய குதிரையினை நடத்தும் இறைவனை ஒத்தது.

இயங்களின் பேரொலியும், குதிரைகளின் கனைப்பொலியும், வீரர்களின் ஆரவாரமும் ஒன்றுகூடித் திசைகளைச் செவிடாக்க, வேதமாகிய குதிரையின் பாகனாகிய சிவபெருமான் மதுரை மாநகர்க்கு அரைக்காத தூரத்தில் வந்தருளினர்.

குதிரைகள் வருதலை அறிந்தோர் அமைச்சர்க்குக் கூறல்

அப்பொழுது குதிரைகளின் வரவைக் கண்டவர்கள் முக மலர்ந்து விரைந்து ஓடி நகரினை அடைந்து முகில்கள் தவழும் மணிமாடத்துச் சிறையிலிருக்கின்ற திருவாதவூரர் திருமுன் சென்று, ''பாண்டியனது அரசியல் நெறியினின்றும் வழுவாத அமைச்சருள் தலைவரே! பல நிறமுள்ள ஏழு கடல்களும் வருவனபோலக் குதிரைகளெல்லாம் வருகின்றன. இப்பொழுது மதில்வாயிலிலே நுழைந்திருக்கும்; அதனை விரைந்து அரசனுக்கு விளம்புவீராக'' என்றார்கள்.

வாதவூரடிகள் அரசரிடம் குதிரைகளின் வரவை அறிவித்தல்

உடனே இறைவன் திருவருளைப் பெற்ற வேதியர் பெருமானாகிய திருவாதவூரர், முகிலைத்தளையிட்ட பாண்டியர் பெருமானை அடைந்து, ''அரசே! குதிரைகள் வருகின்றன'' என்றார்: அதைக்கேட்ட அரிமருத்தன பாண்டியன், உடம்பு பூரிக்க மகிழ்ச்சிமிக, மிகுந்த விலைபெற்ற முத்தாரங்களையும் பட்டாடைகளையும் கொடுத்துத் திருவாதவூரடிகளை மகிழ்வித்து, அரியணையினின்றிழிந்து அமைச்சர் முதலாயினோர் சூழத் தலைவாயிலில் வந்து, அதன் அருகில் உள்ள ஒரு மாடத்தில் புகுந்து பெண்கள் இருமருங்கிலும் நின்று கவரிகள் வீசவும், அமைச்சர் முதலியோர் புறத்தில் சூழவும் குதிரைகளை எதிர்கொள்வானாய் அரியணையில் வீற்றிருப்பானாயினன்.

குதிரைகள் வரவு தாழ்க்க அரசன் மந்திரியைத் தண்டித்தல்

சோமசுந்தரக் கடவுள் தமது திருவிளையாடலைக் காட்டும் பொருட்டுத் திருவுளங்கொண்டு குதிரைகளின் வரவைச் சிறிது போது தாழ்த்தார். பாண்டியன் குதிரைகளைக் காணுமையால் மனம் வெள்கி, ''இது பொய்'' என்று கருதிக் கோபங்கொண்டு,

''திருவாதவூரரைத் தண்டியுங்கள்'' என்ற குறிப்போடு தண்டலாளரை நோக்கினன். அவர்கள் பாண்டியன் கருத்தின் படியே அமைச்சர் பெருமானைக் கொண்டுபோய்ப் பழிபாவங்களுக்கு அஞ்சாமல் கண்டோர் நினைவிற்கு எட்டாத வகையிலே ஒறுத்தார்கள்:

வாதவூரடிகளின் முறையீடு

சிவஞானச் செம்மலாகிய திருவாதவூரர் சோமசுந்தரக் கடவுளை நினைந்து அவர் திருவடிகளைத் துதிப்பாராயினர்.

பூவார் முளரிப் புத்தேள் அறியா நெறிதந்தாய்!
பாவார் தென்சொற் பனுவல் மாலைப் பணிகொண்டாய்!
தேவா! தேவர்க் கரசே! சிறியேன் உறுதுன்பம்
ஆவா என்னாய்! அஞ்சேல் என்னாய்! அறனேயோ?

நெஞ்சே உரையே செயலே எல்லாம் நினஎன்றாய்!
வஞ்சே போலும்; அஃதேல் இன்று வாராயோ?
பஞ்சே ரடியாள் பாகா! கூடற் பரமேட்டீ!
அஞ்சேல் என்னாய்! இதுவோ? அருளுக்(கு) அழகையா!

காவி நேருங் கண்டா! 1நாயிற் கடையான
பாவி யேனைப் பொருளாக் கொண்டென் பணிகொண்டாய்!
ஆவி யோ(டு)இவ் வுடலும் நினதே அன்றோ? இன்(று)
ஓவி வாளா திருந்தால் யார்?என் உடையானே!

குதிரைகளின் சதங்கையொலியும் குதிரைகளின் வரவும்

இவ்வாறு குறையிரந்து வருந்தும் வாதவூரடிகள், தம் இரு செவிகளுள்ளும், தாயைப்பிரிந்து வருந்தும் இளங்கன்றின் காதில் தாய்ப்பசுவின் கனை குரல் ஒலி சென்றடைதல் போலச் சின்னமும் காளமும் காகளமும் எழுப்பும் ஒலி சென்று விழுந்தது; குதிரைகளின் காலடிச் செந்தூள் திசைகளெல்லாம் விழுங்கவும் கண்டார்: பாண்டியனும் குதிரைகளின் வரவை அறிந்து வாதவூரடிகளை அழைப்பித்து அளவிலா அன்பு காட்டி, ''எமது குற்றமற்ற அரசியல் வினைகளை நும்மைப்போல் ஏற்றுச்செய்து முடிப்பவர் யார்?'' என்று கூறி, அடங்காத மகிழ்ச்சியுடன் அவரோடு அளவளாவி இருந்தான்.

---

1. இங்கே, ''நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்'' எனவரும் திருவாசகம் குழைத்த பத்தின் அடி கருதற்பாலது;

அப்போது குதிரைகளெல்லாம், பரவிய இருட்கூட்டத்தைக் கிழித்துப் பல கிரணங்களைப் பரப்பித்தோன்றும் இளஞ்சூரியர்களைப் போன்ற சிறந்த தோற்றத்தையுடைய பாகர்களோடு வந்தன.

பாண்டியனின் பெரு மகிழ்ச்சி

பாண்டியன் தன் மரபிற் போந்த முன்னோர்களும் கண்டறியாத தோற்றத்தையும் விரைந்த நடையினையுமுடைய குதிரைகளைப் பார்த்து, ''நாமும் இந்திரனைப்போல ஆயிரம் விழிகளைப் பெற்றாலும் அவற்றால் இவற்றின் பொலிவுகளைப் பார்க்க முடியாது'' என்ற மனக் குறிப்போடு மகிழ்ச்சியினால் விழுங்கப்பட்டு, அழகிய குதிரையின்மேல் ஏறிவந்த வீரரை நோக்கி வியப்புற்றுத் திருவாதவூரரை நோக்கி, ''இவருள் தலைவர் யாவர்'' என்று வினவினான். அனைத்தையும் அறிய வல்ல அமைச்சர், ''ஐயனே! யான் அதனை அறியேன்'' என்றார்.

இறைவராகிய வீரர் குதிரையினை நடத்திக் காட்டல்

அப்பொழுது அண்டங்களனைத்தையும் ஆதாரமாக நின்று தாங்கியருளும் இன்பப் பேரொளியார், தமக்கு வேதப் புரவியை ஆதரவாகக்கொண்டு எக்காலத்தும் அசையாத தாமரைச் சீறடி அசைய உயிர்களின் பாசத்தைப்போக்கும் திருக்கையினாலே குதிரைக் கடிவாளக் கயிற்றைப் பற்றிக்கொண்டு அரசனுக்கு எதிரே போய், ''அரசே! எங்கள் குதிரை ஏற்றத்தினைச் சிறிது காண்பாயாக'' என்று கூறி, அரசனும், அவையினருமே அல்லாமல் திசைக்காவலரும், தேவர்களும் கண்டு மருளுமாறு குதிரையினை மல்ல கதி, மயூர கதி, வானர கதி, வல்லிய கதி, சர கதி (அல்லது இடப கதி) என்னும் ஐந்து கதிகளும், பதினெண் வகை விசித்திர சாரி (நடை) விகற்பங்களும் தோன்றச் செலுத்திக் காட்டியருளினார். எவ்வுலகத்தையும் அசைக்கவல்ல சிவ பரம்பொருள் நடத்திக் காட்டினமைபோலச் சூழ்ந்து நின்ற சிவகணத்தவராகிய குதிரை வீரர்களும் தாம்தாம் ஏறிவந்த குதிரைகளை நடத்திக் காட்டினார்கள். பாண்டியன் அதனைக்கண்டு அவர்களை நோக்கி, ''உங்களுக்குள்ளே தலைமையானவர் யாவர்?'' என்றான். குதிரை வீரர், சோமசுந்தரக் கடவுளாகிய குதிரை வீரரைச் சுட்டி 'இவர்' என்று காட்டினர்.

சுட்டிக் காட்டுதற்கு அரிய பரஞ்சோதியாகிய இறைவன் வேதமாகிய குதிரையை நடத்திக்கொண்டு பாண்டியன் முன் வந்தார்; அவருடைய அருணோக்கத்திற்கு இலக்காகியபாண்டியன் மனமயங்கித் தன் நிலையை மறந்து இருக்கைவிட்டெழுந்து கைகளைச் சிரசின்மேற்

குவித்துக்கொண்டு நின்றான். பின்பு சிவபெருமானுடைய ஆணையினாலே மறைப்புண்ட அறிவு தன் உள்ளத்திலே தோன்ற, ''இப்பொழுது நாம் ஒரு குதிரை வீரனைக் கண்டு எழுந்து கைகுவித்து வணங்கி நின்ற நிலை என்னே'' என்று கருதித் தன் இருக்கையில் திரும்ப அமருவதற்கு வெள்கி நின்றான்.

குதிரைவீரர் அரசனுக்கு வாணிப முறையைக் கூறுதல்

அங்ஙனம் நிற்கும் பாண்டியனுடைய முகத்தைக் குதிரை வீரராகிய சோமசுந்தரக் கடவுள் பார்த்து, ''பொன்மலை போலும் தோளையுடைய அரசனே! உன் பொருளையெல்லாம் கொண்டு வந்து உனது சொல்லைக் கடவாத அமைச்சராகிய வாதவூரர், தாமாகவே எமக்கும் எம்மை விட்டு நீங்காத பரிசனங்கட்கும் நிறைய வழங்கினார். ஆதலால் வானவர்க்கே அல்லாமல் மனிதர்களுக்குக் கிடைத்தற்கு அரியனவும், விலை மதித்தற்கு அரியனவும், பரிநூல் இலக்கணக் குறைபாடு சிறிதும் இல்லாதனவும் ஆகிய நல்ல குதிரைகள் உனக்கு வந்தன. இக்குதிரைகளை இன்றைக்கு நீ என்னிடத்திலிருந்து கயிறுமாறி நின்னுடையனவாக ஏற்றுக்கொள்ளும் முறையினால் இக்குதிரைகள் நின்னுடையனவேயாம். ஆதலால், அவை நாளைக்கு என்ன தன்மையை அடைந்தனவேனும் எனக்கும் உனக்கும் அதைக்குறித்து யாதொரு வழக்குமில்லை; இது குதிரை வாணிகத்தின் வழக்கம்'' என்றார். அப்பொழுது பாண்டிய மன்னனும் மனமகிழ்ந்து அதற்கு உடன்பட்டு, ''எமது முதல் அமைச்சராகிய திருவாதவூரர் ஒப்பற்ற திறமுடையராய் உம்மிடத்திற்கொண்ட நட்பினாலே மிகுந்த தூய்மையுடையவரானார்'' என்று மிகப் பாராட்டிக் கூறினான்.

குதிரை வீரராய் வந்த கடவுள், குதிரைகளைப் பாண்டியனுக்குக் கயிறுமாறி கொடுத்ததற்கு முன்னே பொதுவாகிய குதிரையின் இலக்கணங்களைக் கூறலானார்.

இறைவன் குதிரையின் இலக்கணங் கூறல்

''அரசே! ஓரிக் கடும்பரி (ஓரி-நரி, நரியாகிய வேகமுள்ள குதிரைகள்; இந்த ஒப்பற்ற வேகமுடைய குதிரைகள்) போர் புரிதற்குரிய சமயம் நேரின், மதிலுறுப்பையும் தாவிச் செல்லும்; பலகணி வாயிலும் நுழைந்து செல்லும்; வெளியிடங்கள் அனைத்தையும் வழியாகக்கொண்டு செல்லும்; கொடிய பசி வந்துற்றால் தின்னப்படாத வைக்கோல் முதலியவற்றையும் தின்னும்.

காயும்வேல் மன்ன! ஓரிக் கடும்பரி அமையம் வந்தால்
ஞாயிலுந் தாண்டிச் செல்லுப்; நாட்டமும் நுழையாச் சால
வாயிலும் நுழையும்; கண்ட வெளியெலாம் வழியாச் செல்லும்;
தீயவெம் பசிவந் துற்றால் தின்னாத எனினுந் தின்னும்.

சிறந்த இலக்கணம் நிறைந்த குதிரையொன்று ஒருவனிடம் வந்து தங்கியிருந்தால், அவனிடம் விரைந்து திருமகள் வந்து. பொருந்துவாள்; வளமிக்க செல்வம் பெருகும்; புகழ் மிக்கு ஓங்கும்

குதிரைகள் [1]பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம் எனப் பலவகை உள

பாடலம் என்பது மாந்தளிர்போன்ற நிறமுடைய நாவினையும், உயர்ந்த குளம்புகளையும், தம்முள் ஒத்த நீண்ட பற்களையும், பாம்பின் படம்போன்ற மார்பினையும் கழுத்தினையும் கொண்டதாகும்.

கோடகம் என்பது அகன்ற நெற்றியினையும், குடுமிபோல் ஒரே நிறமுடைய பிடரிமயிரினையும், முக்கோணமான அழகிய முகத்தினையும் பெற்றதாகும்.

இவுளி என்பது போரின்கண் தன் முகத்தில் வாளினால் வெட்டினும் எதிர்த்துப் போர்புரியும் வல்லமையினையும், குரங்கு, புலி, யானை, நரி, சிங்கம், சரபம், முயல், முகில் என்ற இவற்றுள் ஒன்றன் நடையினையும் கொண்டதாகும்.

வன்னி என்பது பொருந்திய உயர நீளங்களையும், சங்கும் வெள்ளைச் சருக்கரையும் போன்ற வெள்ளிய வாய்நுரையினையும், பிங்கல நிறம் (பொன்மைகலந்த செந்நிறம்), கருநிறம் ஆகிய இவற்றுள் ஒன்றன் நிறத்தினையும் கொண்டதாகும்.

குதிரை என்பது கழுத்தில் வலமாகச் சுழிந்திருக்கும் சுழியாகிய தெய்வமணியினையும், முகம், மார்பு, உச்சி, வால், நான்கு கால்கள் என்னும் இவ்வெட்டுறுப்புக்களில் வெண்மை கலந்துள்ள அட்ட மங்கலம், முகம், நான்கு கால்கள் இவ்வைந்து உறுப்புகளில் வெண்மை கலந்துள்ள பஞ்ச கல்யாணி ஆகிய இவற்றுள் ஒன்றனையும் பெற்றதாகும்.

பரி என்பது குங்குமப்பூ, கருப்பூரம், அகிற்குழம்பு, கத்தூரி ஆகிய இவற்றுள் ஒன்றன் மணத்தினையும், சங்கு, மேகம், சரபம், சிங்கம் ஆகிய இவற்றுள் ஒன்றன் ஒலிபோன்ற கனைப்பினையும் கொண்டதாகும்.

கந்துகம் என்பது கடைந்து எடுத்தாற்போன்ற நான்கு கால்களையும், சுழலும்போது கொள்ளிவட்டம்போல் திகழும் இயல்பினையும், ஏறிய வீரனுடைய காலினுள் அடங்கும் தன்மையினையும் கொண்டதாகும்.

---

1. இப்பெயர்கள் குதிரைக்குரிய பல பெயர்களும் ஆகும்.

''முழு இலக்கணமும் ஒளியும் நிறைந்தவையும், மதிலையும், மலைமேற் கோட்டையையும், நதியினையும் தாண்டிடும் வலிமை பெற்றவையுமே இங்கு வந்துள்ளன. இவற்றின் வயது எட்டு ஆகும். அரசே! இக்குதிரைகள் தங்களால் ஏறிச் செலுத்தத் தக்கவை'' என்று சொல்லி மறை முடிவாகிய உபநிடதத்தின் உட்பொருளான இறைவர் தம் கணங்களின் முகத்தைத் திரும்பி நோக்கினர்.

கணநாதராகிய வீரர்கள் குதிரைகளை நடத்திக்காட்டல்

உடனே குதிரை வீரர்கள் குதிரைகளின் இலக்கணங்களைக் கூறும் நூல்கள் அனைத்திற்கும் எல்லை காட்டுவதுபோலக் கண்டவர் மனமும் பிற்படக் குதிரைகள் அனைத்தையும் விரைந்து ஓடும்படி[1] செலுத்தினர்கள். பாண்டியன் அதுகண்டு வியப்படைந்தான்; தன் அருகு சூழ்ந்த மந்திரி முதலாயினோரை நோக்கி முடியினை அசைத்துப் புன்னகையுடன் பெருமகிழ்ச்சி கொண்டான்[2].

சிவபெருமானாகிய வீரர் தம் குதிரையினை நடத்திக்காட்டல்

சிவபெருமானாகிய வீரரும் வேதப்புரவியை, இடசாரியும் வலசாரியுமாகக் கொண்டு கொள்ளிவட்டம்போல் வட்டமாக வருமிடத்து வீதியனைத்தும் ஒரு குதிரையே நிலைத்துநின்ற தோற்றம் போன்று ஒரு கணப்பொழுதில் நடத்திக்காட்டினார். இவ்வாறு சுற்றிவரும் புரவி முன்னாளிலே வங்கியசேகர பாண்டியன் வேண்ட இறைவன் தமது திருக்கரத்திலே நிலைபெற்றிருந்த கங்கணமாகிய பாம்பினை விடுத்து மதுரை மாநகரின் பழைய எல்லையைக் காட்டியது போன்றிருந்தது. மற்றும் பல நிறமுடைய குதிரைகள் வீதியுள் பின்னிய பாம்புபோல வட்டமாய்ப் பின்னிச் செல்லும் காட்சி, மதுரையாகிய மங்கையின் கையில் அணிந்த பலநிற மணிகள் பதித்த வளையல்கள் போன்றன. பெண்கள் இடித்த பொற்சுண்ணஞ் சிந்திய வீதியின்கண் தாவிச் செல்லும் குதிரைகளின் வரிசைகளினின்று எழுந்த புழுதி, பொன்னுலகத்திலே குதிரைகள் உந்திச் செல்லும்போது மேலெழுந்த பொற்புழுதியை ஒத்தது.

இவ்வாறு தேவர்களும் பிறநகரிலுள்ள மக்களும் மதுரை நகர மக்களும் மகிழும்படி இறைவர் குதிரையைச் செலுத்திப் பாண்டியனின் முன் தம் வீரருடன் வந்து நின்றார்.

---

1. குதிரை ஓடும்படி செய்து காட்டிய இடம் 'மா நகரி' என்பர்; இது மதுரைக்கு வடகிழக்கில் உள்ளது.

2. பாண்டியன் மகிழ்ந்து குதிரைகளை நன்கு மனத்திலே விலை மதித்த இவ்விடம் 'மதிச்சயம்' எனப்பெறும். மதிச்சயம் - இஃது ஓர் ஊர்.